போன் நெ. 15. விலை 2 அணா. REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 11—7—54 | இதழ் 2

பூச்செண்டு

காம்ரேட் கழுகாசலம் அன்று கதிரவனைக் கண்ட கமலம்போலக் காணப்பட்டார். சில நாட்களாகவே என்னைக் கண்டதும் அவருக்கு முகம் கடுகடுப்பாகிவிடும், படபடவென்று பேசுவார், நான் பதில் கூறினாலோ, காதிலே வாங்கிக் கொள்ளவே மாட்டார். அப்படிப்பட்டவர் அன்று என்னைக் கண்டதும் கனிவுடன் கரம் கூப்பினார், கடைக்காரர் கூட எங்கள் இருவரையும் பார்த்து இலேசாகச் சிரித்தார்.

நேருபண்டிதரும் — சீனப்பிரதமர் சௌ-இன்-லாயும் கை குலுக்கிக்கொண்டிருக்கும் விதமாக இருந்த போட்டோ போடப்பட்டிருந்த இதழ்களை, காம்ரேட் கழுகாசலம் ஒன்றுவிடாமல் வாங்கிக் கொண்டிருந்தார். அவருடைய ஆனந்தத்தின் காரணம் ஓரளவுக்கு எனக்கும் புரிந்தது. "காம்ரேட்!" என்று ஆரம்பித்தவர், தன்னைத் திருத்திக்கொள்பவர் போலத் தயங்கி, "பிரதர்!" என்று பேச்சைத் துவக்கினார். சில நாட்களாகவே, கழுகாசலம், என்னைக் 'காம்ரேட்' என்று கூப்பிடுவது கிடையாது. அந்தப் பதத்தைப் பெறும் அளவுக்கு நான் சிகப்பு ஏறவில்லையாம்! பிரதர், என்று அழைத்து, நம்ம நேரு நேருதான், ஆயிரம் பேர் ஆயிரம் சொல்லட்டும், நேருவுக்கு நிகர் நேருவேதான், என்றார். இப்படி அவர் காவடிச் சிந்து பாடக் கேட்டு எனக்கு ஒரே ஆச்சரியம். "என்ன பிரதர்! நேருபண்டிதர், பொதுஉடைமைக் கட்சித் திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டாரா? தொழில்களை எல்லாம் தேச உடைமையாக்கிவிட்டாரா? அவரைப் புகழ்ந்து பேசும் விதமாக என்ன காரியம் செய்துவிட்டார்?" என்று நான் கேட்டேன். உலகம் அறியாத அப்பாவியாக இருக்கிறாயே என்று என்னைக் கேட்பது போல ஒரு பார்வை பார்த்தார், கழுகாசலம். பார்த்துவிட்டு, சீனப் பிரதமர் சௌ-இன்-லாய் அவர்களை டெல்லிக்கு வரவழைத்து ராஜோபசாரம் நடத்தி, உலக சமாதானத்துக்கு வழிகண்டு கூறும் விதமான கூட்டு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் பிரதர்! நம்ம நேரு, என்று பெருமிதத்துடன் கூறினார். ஆமாம், பேப்பரில் பார்த்தேன், என்று நான் கூறினேன், கோபம் வந்துவிட்டது கழுகாசலத்துக்கு. "இதுதான் பிரதர்! பூர்ஷுவா மனோபாவம்—அமெரிக்க மாடல்— பேப்பரில் பார்த்தேன், என்று எவ்வளவு சர்வ சாதாரணமாகக் கூறுகிறீர், சாமான்யமான சம்பவமா இது, அற்ப விஷயமா......" என்று கோபமாகப் பேசலானார். பிரதர்! மிகவும் முக்கியமான சம்பவம் இந்தச் சந்திப்பு—யார் மறுப்பார்கள் — அந்தச் சந்திப்பினால், உலகுக்கு நன்மை விளையும் என்று எல்லோரையும் போல நானும் எண்ணுகிறேன், நம்புகிறேன்" என்று சொன்னேன், நண்பரின் கோபம் சிறிது குறைந்தது. பிரதர்! நேரு, சௌ-வைக்கண்டு பேசிக் கூட்டு அறிக்கை விட்டிருக்கிறார், அதனால், உங்கள் அன்புக்கு, வாழ்த்துக்குப் பாத்திரமாகிவிட்டார்! இனி நேரு ஜிந்தாபாத் கோஷம் கிளம்பும் உங்கள் கூட்டத்தில், அப்படித்தானே, என்று கேட்டேன். சேச்சே! நேருவைப் பாராட்டுகிறோம், ஆசியாவின் ஐக்கியத்துக்காக—உலக சமாதானத்துக்காக — ஜனநாயக பாதுகாப்புக்காக— அமெரிக்க போர் வெறியை ஒழிப்பதற்காக— சீனப்பிரதமர் சௌ-இன்-லாயுடன் கலந்து பேசியதற்காக, நேருவைப் பாராட்டுகிறோம். அதனால் நேருவின் எல்லா நடவடிக்கைகளையும், அவருடைய காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளையும் ஆதரிக்கிறோம் என்று பொருள் கொள்ளலாமா! இந்த ஒரு, தனிச்சிறப்பு வாய்ந்த நடவடிக்கைக்காகப் பாராட்டுகிறோம், நேருவை, ஆதரிக்கவில்லை! என்று விளக்கமளித்தார். அதுதானே கேட்டேன், எங்கே, நேருவையே ஆதரிக்கக் கிளம்பி விட்டீர்களோ என்று பார்த்தேன். பாராட்டுகிறீர்கள்—ஆதரிக்கவில்லை—என்று நான் கூறினேன், அவர் சொன்னதைப் புரிந்து கொண்டேன் என்பதை அவருக்கு விளக்க. ஆமாம் பிரதர்! இதற்கு ஏன், இவ்வளவு பேசுகிறீர்? என்று கழுகாசலம் கேட்டார். ஒன்றுமில்லை பிரதர்! காமராஜர், ஆச்சாரியார் புகுத்திய அனியாயக் கல்வித் திட்டத்தை ரத்து செய்தார், நாங்கள் அதற்காக அவரைப் பாராட்டினோம்

—உடனே, ஒரேயடியாக நாங்கள் காமராஜரை ஆதரிக்கிறோம், காங்கிரஸ்கட்சிக்குக்காவடி தூக்குகிறோம் என்றெல்லாம் உங்கள் நண்பர்கள் வெளுத்து வாங்குகிறார்கள். இப்போதாவது, பாராட்டுவது என்பது ஒன்று ஆதரிப்பது என்பது வேறொன்று என்ற அரிச்சுவடியை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததே என்று எனக்கு ஒரு மகிழ்ச்சி; வேறொன்றுமில்லை. என்று கூறினேன். காம்ரேட் கழுகாசலத்துக்கு, பழையகோபம்கிளம்பிற்று. நமஸ்தே!—என்று கூறி விட்டு, வேகமாக நடந்தார்.

❋

காமராஜர் வெற்றி பெற

கவர்னர் தயவு தேடி, கொல்லைப்புறம் புகாது, நேரடியாக, பொது மக்களின் ஆதரவைப் பெற, தேர்தலில் நிற்க முன்வந்த பண்பு,

ஜாதிச் செல்வாக்குக் கிடைக்க வேண்டுமென்று எண்ணாமல், மக்களின் ஆதரவு தேவை என்ற கொள்கையை மதித்து, தேர்தலில் ஈடுபடும் நேர்மை,

காங்கிரஸ் கட்சியின் சார்பில் பதவி பெற்றாலும், எல்லாக் கட்சிகளையும் மதித்து, அந்தக் கட்சிகளின் கொள்கைகளையும் திட்டங்களையும் அறிந்துகொள்ள முயற்சித்து, ஆட்சி செலுத்த விரும்பும், போக்கு,

மக்களின் குரலை மதியாமல், ஆச்சாரியார் புகுத்திய கல்வித் திட்டத்தை ரத்துசெய்த, நெஞ்சு உரம், ஆகியவைகளுக்காகக் காமராஜர் பாராட்டப்படுகிறார்.

இது பொதுத் தேர்தல் அல்ல—ஆட்சிமுறை மாறுவதற்கான தேர்தல் அல்ல இது—எனவே, இதிலே பெரிதும் கட்சி வேலைத் திட்டங்களோ கொள்கைகளோ, பிரச்சினைகள் ஆக்கப்படவில்லை.

மேலும், ஜனநாயகத்தை மதிக்க மறுத்து, நாட்டிலே கொடிய அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு வெறியாட்டமாடிய ஆச்சாரியார், மீண்டும் பதவியில் புகச் சமயம் பார்த்துக்கொண்டு இருப்பதும், இதனை ஆதரிக்கும் கூட்டத்தார், இந்தத் தேர்தலில் காமராஜரை வீழ்த்த சகல சக்தியையும் யுக்தியையும் பயன்படுத்திப் பார்க்கத் திட்டமிட்டு இருக்கிறார்கள் என்பதும், பெரிதும் பேசிக்கொள்ளப்படுவதால், ஆச்சாரியாரின் அந்தரங்க ஆசையில் மண் விழச் செய்யவேண்டும் என்ற எண்ணம் மிகப் பெரிய அளவில் இருக்கிறது.

ஆச்சாரியார் ஆட்சியில் இருக்கும் வெறுப்பும், மீண்டும் அவர் ஆட்சிக்கு வந்துவிட இந்தத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்வார்களோ என்ற அச்சமும், திராவிட மக்களுக்கு நிரம்ப இருக்கிறது—அது, காமராஜரை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தையும் ஊட்டிவிட்டிருக்கிறது.

காமராஜரை எதிர்த்து நிற்பவர், திராவிட நாடு பிரிவினையைப் பலமாகக் கண்டிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சியினர்.

திராவிடரின் அடிப்படைக் கொள்கையான 'திராவிட நாடு' பிரச்சினையில், காமராஜரும்–கம்யூனிஸ்டும், ஒரேவிதமான கருத்துக் கொண்டவர்கள். எனவே, திராவிட நாடு பிரிவினையை ஆதரிக்கும் அன்பருக்கு, நமது ஆதரவு, என்று கூறி, காமராஜருக்கு எதிராக வேலை செய்யும் ஆர்வம் எழக் காரணம் கிடைக்கவில்லை.

சமீபகாலமாகக் கம்யூனிஸ்டுக் கட்சி, தன் பலத்தில் பெரும் பகுதியை திராவிட இயக்கத்தை எதிர்ப்பதிலேயே செலவிட்டு, திராவிட இயக்கத்தின் வெறுப்புக்கு ஆளாகி விட்டது.

இந்நிலையில், காமராஜர் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை உருவாகி விட்டது.

இதிலே, தாங்களும் பங்கு எடுத்துக்கொண்டதாக மெய்ப்பித்துக் கொள்வதற்காகப் பணம் படைத்தோரும் காமராஜரை ஆதரிக்கின்றனர்.

ஆனால், காமராஜர் வெற்றிபெறுவது, அவருடைய ஜனநாயகப் பண்பையும், கல்வித் திட்டத்தை ஒழித்த ஆற்றலையும் பாராட்டி, நன்றி காட்டும், ஏழை எளியவர்களின் துணையினால்தான் என்பதை அவர் அறியவேண்டும்.

எனவே, வெற்றிபெறும் வழி, மேலும் பொதுமக்கள் மனதைக் குளிரச் செய்வதுதான், என்பதை அறிந்து செயலாற்றவேண்டும்.

பொதுமக்களின் குறைகள் பலப்பல! எனினும், நீதி, நேர்மை, அன்பு, அறம், மனிதாபிமானம் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டி, உடனடிப் பிரச்சினையாக, காமராஜர், களம்பூர் விவசாயத் தோழர்களை விடுதலை செய்ய முன்வரவேண்டுகிறோம்.

களம்பூர் தோழர்கள் கடுமையான தாக்குதலுக்கு ஆளாகிஇருக்கிறார்கள்.

சிறையும் வழக்கும் அவர்களைத் தாக்குகின்றன.

அவர்கள், விவசாய மக்களின் நல்வாழ்வுக்காகக் கிளர்ச்சி செய்யும் அறப்போர் வீரர்கள்.

அவர்களின் கண்ணீரைத் துடைப்பது காமராஜரின் உடனடியான கடமையாகும்:

காமராஜர் சர்க்கார் ஏழைக்கு நியாயம் வழங்கும் என்று ஆயிரம் மேடைகளிலே பேசுவதைவிட, இந்த ஒரு செயல்மூலம், திட்டமாக நாடு அறியச் செய்யலாம்.

களம்பூர்த் தோழர்களை விடுதலை செய்து, வழக்குகளை வாபஸ்பெற்று போலீஸ் கெடுபிடியை நீக்கி, வெற்றிக்கு வழி தேடிக்கொள்ளும்படி காமராஜருக்குக் கூறுகிறோம்.

வடார்க்காடு மாவட்டக்கிளைக்கழகங்கள் அனைத்தும் இந்தக் கருத்தை விளக்கி, காமராஜருக்குத் தந்தி கொடுக்க வேண்டுகிறோம்.

களம்பூர்த் தோழர்களின் களிப்பு வெற்றிக்கு வழி. களம்பூர்த் தோழர்களை விடுதலை செய்து, வழக்குகளை வாபஸ் பெற வேண்டுகிறோம், என்ற தந்திகள் குவியட்டும்.

ஆதரவு திரட்ட வரும் அன்பர்களிடமும் களம்பூர் பிரச்சினையை விளக்கி, காமராஜர் செயல் புரிய வேண்டும் எனக் கூறுங்கள். ❁

கனி பறிக்கச் சென்று……!

-[வேல்]-

கனி பறித்திடச் சென்றான், காரிகையைக் கற்பழித்தான்!

கௌடமாலாவின் கதி இதுபோலாகிவிட்டது.

அங்கு, அமெரிக்க முதலாளிகள், பழத்தோட்டம் கண்டனர்—இன்று நாட்டையே அடிமைச்சாவடியாக்கி விட்டனர்.

வளமான நாடு, வளத்தைப் பயன்படுத்தப் போதிய பணம் இல்லை—நான் தருகிறேன் பணம்—தொழில் வளர வேண்டுமா? நான் யோசனை கூறுகிறேன், நிபுணர்களை அனுப்புகிறேன், நீங்கள் விரும்பினால் நானே அந்தத் தொழிலையும் நடத்திக் காட்டுகிறேன், என்று, இன்று அமெரிக்கா, உலகெங்கும்—குறிப்பாக, பின்னணியில் உள்ள நாடுகளில்—பறைசாற்றி வருகிறது. இந்தியா உட்பட பல நாடுகள் அதன் சாகசத்துக்குப் பலியாகி வருகின்றன. கௌடமாலா, அமெரிக்காவின் கரம்பட்டால் என்ன கதி நேரிடும் என்பதை எடுத்துக் காட்டும் சம்பவமாகிவிட்டது.

முதலில், பெரிய பண்ணைகளைத் தான் அமெரிக்கா கௌடமாலாவில் ஏற்படுத்திற்று. கனி குலுங்கும் சோலைகள், சாலைகள்! பச்சைப்பட்டு விரித்ததன்ன தோட்டங்கள், அவைகளிலே பல வண்ணக் கனி வகைகள்! பாடும் பறவைக் கூட்டம்! எங்கும் சுவை தரும் மணம்! காடு, இத்தகு கனிச் சோலையானதே என்றுகூடப் பலர் களித்தனர். இதுநாள்வரை தூங்கிக்கிடந்த செல்வத்தை, இந்தத் 'திருத் தூதர்கள்' எழச் செய்தனர்; எழில்நடமிடுகிறது, செல்வம் கொலுவீற்றிருக்கிறது, என்று பண் பாடினர். ஆனால் பழத் தோட்டம், இன்று கௌடமாலாவைப் பிணக்காடு ஆக்கிவிட்டது! குண்டு மாரி பொழிந்தனர், குடல் தெறிக்க ஓடும் மக்களைக் கொன்று குவித்தனர், மக்களாட்சியை மாய்த்தொழித்தனர், சர்வாதிகாரம் வெறியாட்ட மாடுகிறது! பழக் கம்பெனி துவக்கம்; பாழ்நிலை, அறுவடை!

அரசியல் முன்னேற்றம் காணாத இருபதுக்கு மேற்பட்ட தென் அமெரிக்காக் கண்டத்து நாடுகளில் ஐந்து நாடுகள்தான் மக்களாட்சி முறையைக் கொண்டவை. அதில் கௌடமாலா ஒன்று. மற்ற நாடுகள் சர்வாதிகார ஆட்சியில், 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்றநிலையில் வாழ்பவை. தோண்டப்படாத உலோகச் சுரங்கங்களும், தானாகவே விளையும் தானியப் பயிர்களும் இந்த நாடுகளில் ஏராளம். தென் அமெரிக்காவில் விளையும் அளவற்ற காப்பிக் கொட்டை, பறிப்பாரின்றி ஆண்டு தோறும் அழிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட வளம் வாய்ந்த கண்டத்தை விஞ்ஞானவளர்ச்சியடைந்த அமெரிக்க டாலர் தனவான்கள் தங்கள் கைக்குள் வைத்திருக்கின்றனர். அடிமைகளாய் கிடக்கும் நீக்ரோ, செவ்விந்தியர்களை அடக்கி ஆளும் ஸ்பானிஷ், ஜெர்மன், பிரஞ்சு ஆதிக்கக்காரர்களுக்குத் தேவையான துணி கார், இயந்திர சாமான்கள் முதலியவைகளைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதில் அந்தந்த நாட்டிலே கிடைக்கும் இயற்கைப்பொருள்களையும், மூலப் பொருள்களான ஈயம், துத்தநாகம், தாம்பரம் முதலியவைகளை அள்ளிச் செல்கின்றது, அமெரிக்க முதலாளி வர்க்கம்.

தென் அமெரிக்காவில் ஓடும் ரயில், பறக்கும் விமானம், பளிச்சென்று தெரியும் மின்சாரம் எல்லாம் அமெரிக்க முதலாளி வர்க்கத்தின் சொந்தம். மொத்தத்தில் ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரப் பிடியும் அமெரிக்க முதலாளிகள் கையிலிருக்கிறது.

இப்படி ஒரு கண்டத்தையே சூறையாட, அந்தக் கண்டத்திலே இருக்கும் இருபது நாடுகளிலும் அரசியலில் மக்களுக்கு சுதந்திர எண்ணம் உண்டாகாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டியது, இந்த டாலர் முதலாளிகளுக்கும், அவர்களைக் காப்பாற்ற இருக்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் உள்ள முக்கியமான வேலை. உலகமெங்கும் மக்களாட்சியைப்பற்றி வானளாவப் பேசும் அமெரிக்கா, இந்த இருபதில் பதினைந்து நாடுகளில் நடக்கும் சர்வாதிகார ஆட்சியைக்கண்டிப்பதில்லை—கவலைப்படுவதுமில்லை. எல்லா அமெரிக்க நாடுகளின் குழு ஒன்றை நிறுவிக்கொண்டு, இப்பொழுது இருப்பதைப்போலவே, இன்னும் சுரண்டல் திட்டம் நீடிக்க வழி செய்து கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் நடுவில் மாட்டிக் கொண்டிருக்கும் கௌடமாலா நாடு நம் தமிழகத்தைவிட கொஞ்சம் சிறியது. சுமார் ஐம்பதாயிரம் மைல் சுற்றளவுகொண்ட இந்நாட்டில் கிட்டத்தட்ட நாற்பது லட்சம் மக்கள் வாழ்கின்றனர். காபிக்கொட்டையும், வாழைப்பழமும் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெருமளவு உற்பத்தி செய்யும் கௌடமாலா வழக்கப்படி பல ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சியின் கீழிருந்தது. மற்ற நாடுகளைச்சுரண்டுவதுபோலகௌடமாலாவிலும், அமெரிக்க ஐக்கிய பழக்கம்பெனி என்ற கோடிக்கணக்கான டாலர்களை மூலதனம் போட்டுள்ள அமெரிக்க முதலாளி வர்க்கக் குழுவொன்று, அந்நாட்டுப்பொருளாதாரத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. 30 லட்சம் ஏக்கருக்கு மேல்பழத்தோட்டங்களை தன் வசமாக்கிக்கொண்ட இப் பழக்கம்பெனிக்கு 100 கப்பல்களும், 2140 மைல் நீள ரயில்வேக்களும் சொந்தமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட பலத்த பிடியிலிருந்து விடுபட முயன்ற கௌடமாலாவின் உரிமை உணர்ச்சிபெற்ற அரசியல் வாதிகள் முதல்வேலையாக 1944-ல் அந்நாட்டு சர்வாதிகார ஆட்சியை ஒழித்து மக்

ளாட்சியை நிறுவினர். அன்றுமுதல் அந்த நாட்டுக்கு இடைவிடாத தொல்லைகளைக்கொடுத்து வருகிறது அமெரிக்க முதலாளிவர்க்கம்

புரட்சியில் பூத்த கௌடமாலா சர்க்கார், 25 கோடி ரூபாய் முதலீடு போட்டு, இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களை நசுக்கி வந்த அமெரிக்க ஐக்கியப் பழக் கம்பெனியின் அதிகாரத்தைப் பிடுங்க ஆரம்பித்தனர். தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடுகளும், போனஸூம், கூலி உயர்வும் கொடுக்க வேண்டுமென மக்கள் சர்க்கார் பிரகடனப்படுத்தியது. இதைக் கண்ட அமெரிக்க முதலாளிவர்க்கம் கௌடமாலா சர்க்கார், கம்யூனிஸ்ட் என்ற பாணத்தை வீசியது. அமெரிக்காக் கண்டத்திற்குள்ளேயே கம்யூனிஸ்டுகள் அரசாங்கமா என்று முழங்கியது.

1952—ல் நில சீர்திருத்தத்தையும் முன்னேற்ற பொருளாதாரத்திட்டங்களையும் வெளியிட்டது மக்கள் அரசாங்கம். தங்களுடைய ஆதிக்கம் அடியோடு அழிக்கப்படுவதைக் கண்ட ஐக்கிய பழக்கம்பெனி கௌடமாலா அரசாங்கத்திற்கு எதிராகப் பெரும் பிரசாரத்தை ஆரம்பித்தது. அவர்களுடைய நலத்தை பாதுகாக்க இருக்கும் ஐஸன் ஹோவர் ஆட்சியும் கௌடமாலாவின் சீர்திருத்தங்கள் கம்யூனிஸ்டுகளின் செயலென்று கூறி, கௌடமாலாவிற்கு எதிராக மற்ற அமெரிக்க நாடுகளை ஒன்று சேர்த்தது. உண்மையில் பார்க்கப் போனால் கௌடமாலாவில் ஆள்பவர்கள் யாரும் கம்யூனிஸ்டுகளே இல்லை. மக்களாட்சியில் விருப்பம் கொண்ட முன்னேற்றவாதிகள். இருந்தாலும் முன்னேற்றமான பொருளாதார திட்டங்கள் கொண்டுவருவதே அமெரிக்காவிற்கு பிடிக்கவில்லை. கௌடமாலாவில் ஆரம்பித்து, பின்னால் ஒவ்வொரு அமெரிக்க நாடுகளிலும் இதே மாதிரி சீர்திருத்தங்கள் பரவினால், அது டாலர் முதலாளிகளை ஓட்டாண்டிகளாக்கிவிடும் என்பது மாத்திரமல்ல; ஒருவேளை சோவியத் நாட்டிற்கு அமெரிக்காக் கண்டத்திலேயே இடம் கிடைத்துவிடுமோ என்ற பயமும், ஐஸன் ஹோவரின் அரசாங்கத்தை கௌடமாலாவில் நேரடியாக இறக்கிவிட்டிருக்கிறது.

கௌடமாலாவிற்குத் தெற்கில் உள்ள ஹொண்டுராஸ் என்ற நாட்டிற்கு ஏராளமான ஆயுதங்களை அனுப்பி, அங்கு தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டு வசித்துவந்த அர்மாஸ் என்ற கௌடமாலா படைத்தலைவன் மூலம் கௌடமாலா மக்களாட்சியை ஒழிக்கத்திட்டம் போட்டனர். மக்களாட்சியை அழித்துவிட்டனர்; சர்வாதிகார ராணுவ ஆட்சி, டாலர் தேவதைகளின் தாளத்துக்கு ஏற்றபடி ஆட்டமாடும் வெறியர் ஆட்சி முளைத்துவிட்டது.

முதலாளித்துவ சுரண்டல், காலனி நாடுகள் பிடிக்கும் முறை எல்லாம் எங்கள் சரித்திரத்திற்கே முரணானது என்று பெருமை பேசும் அமெரிக்கா, கௌடமாலாவில் நடந்துகொண்டமுறை வெட்கக் கேடானது. டாலர் ஆதிபத்யம் உலக முன்னேற்றத்திற்கு தடையானது என்று கூறுவது எவ்வளவு சரியானது என்பதை கௌடமாலா சம்பவம் நிரூபிக்கிறது.

மொத்தத்தில் முதலாளித்துவம் பூண்டோடு அழிக்கப்படாதவரை மக்களாட்சி நிரந்தரமாக முடியாது என்பதற்கு கௌடமாலாவில் சர்வாதிகாரம் மீண்டும் வருவது அத்தாட்சியாகும்.

★

கற்பனைக் குறிப்பேடு

[இந்தக் கிழமை சாதித்தவை]

1. அண்ணாத்துரை, காமராஜரை இழிவுபடுத்துகிறார் என்று எடுத்துக் காட்டி, தி. மு. க-வும் காங்கிரசும் நேசமாவதைத் தடுத்துவிட்டேன்!

2. விநாயகம் எம். எல். ஏ. அவர்களைக்கொண்டு, வன்னியர் மாநாட்டிலே கனல்கக்கச்செய்து, தி. மு. க. வின் பலத்தைக் குறைத்துவிட்டேன்!!

3. காங்கிரஸ், என்போன்ற ஊழியர்களுக்குத்தான் சொந்தம், ராமநாதபுரம் ராஜாக்களுக்கு அல்ல, என்று பேசி, காங்கிரஸ் முதலாளிகளிடம் சரண் அடைந்துவிட்டது என்ற உண்மையை உலகுக்கு அறிவித்துவிட்டேன்!!!

4. எல்லைக்கமிஷன் தினம் கொண்டாடிவிட்டேன் — இனி இந்தப் பிரச்சினையில், யார் வேலை செய்து, என்ன வெற்றி கிடைத்தாலும், எனக்கே பெருமை என்பதற்கு அஸ்திவாரம் போட்டுவிட்டேன்.

5. என் மேடைகளிலே சினிமா நடிகர்கள் இல்லை என்று என் தோழர்களுக்கு இருந்துவந்த மனக்குறையைப் போக்க நடிகர்களை மேடையில் கொண்டு வந்திருக்கிறேன்.

6 என்னைக் காங்கிரசிலிருந்து தள்ளிவிட்டால், பிறகு என் கழகம் எப்படி உருவெடுக்கும் என்பதைச் சூசகமாக எடுத்துக்காட்ட, காங்கிரஸ் எதிர்ப்பாளர் விநாயகம் போன்றாரை, என் மேடையில் பேச வைத்திருக்கிறேன்.

7. கட்டபொம்மன் படமாக்கப்படுகிறது—நான்தானே அதற்குக் கதை, வசனம் எழுதவேண்டும் என்ற கேள்வி கேட்கும் நண்பர்களின் கடிதங்களைப் பிரசுரிக்கத் திட்டமிட்டு விட்டேன்.

8. பெரியார் காமராஜரை மட்டும் தான் ஆதரிக்கிறார், காங்கிரசை அல்ல, என்று தெரிந்து கொள்ளாமலிருக்கும் காங்கிரசாருக்குத் தெளிவுவர, பெரியாரே! காங்கிரசையும் ஆதரியுங்கள் என்று பேசி இருக்கிறேன். இதிலிருந்து, பெரியார் காங்கிரசை ஆதரிக்கமாட்டார் என்பதை—அனைவரும் புரிந்து கொள்வார்கள். இது ஒரு பெரிய அரசியல் உண்மையைத் தமிழகத்துக்கு அளிக்கும் அரும் பெரும் காரியம் என்று அன்பர்கள் கூறுகிறார்கள். நன்றி. மகிழ்ச்சி. ஆனால், இதிலே புதைந்துள்ள மற்றோர் பேருண்மையை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். பெரியார், காமராஜரை ஆதரிக்கிறார், காங்கிரசைஎதிர்க்

கிருர். நான் காங்கிரசை ஆதரிக்கிறேன் காமராஜரை எதிர்க்கிறேன்.

9 காமராஜர், அண்ணாதுரை இருவருமே அழகில்லாதவர்கள் என்ற பொருள் படும்படி பேசி இருக்கிறேன்—இப்படிப் பேசிடும் நான் எப்படி இருக்கிறேன் என்று அறியும் ஆவல் நிச்சயமாகப் பலருக்கு ஏற்பட்டுத் தீரும்—எனவே, காலண்டர் கம்பெனிக்காரர்கள், அட்டைப் பட வியாபாரிகள், என் உருவப் படத்தை வெளியிட இது அருமையான சந்தர்ப்பம்—அவர்கள் என்ன காரணத்தாலோ தவறிவிட்டால், கழகம் வெளியீடாகவே, உருவப் படம் வரவேண்டும் என்று அன்பர்கள் கூறுகிறார்கள். வரவேற்கிறேன் யோசனையை! வளர்க மதி!

ம. பொ. சி.

வழி சொல்லிவிட்டார்!

இனி என்ன கஷ்டம்? இதோ, வழி சொல்லி விட்டார்! அகில உலகத்தையும் அச்சமும் கவலையுமின்றி வட்டமிட்டு வரலாமாம்—பிறதேசங்களுக்குச் சென்றால் பேசவும், வாழவும் ஆங்கிலமொழிதானே தேவைப்படுகிறது—இனி அச்சங்கடம் இல்லை! ஏனெனில், இதோ அவர் வழி சொல்கிருர்!!

சம்ஸ்கிருதத்தைக் கற்றுக் கொண்டால், போதுமாம் — சகலநாடுகளையும் சங்கடமின்றி சுற்றிப் பார்க்கலாமாம்—முடிந்தால் ஏனைய நாடுகளுடன் கூட அம்மொழியிலேயே அலுவல்களை நடத்த முடியுமாம்!! அவர், கூறி விட்டார்—பித்தரல்ல; பெரிய இடத்து மந்திரி! இந்தியாவில் எந்தக் கிராமத்துக்குச் சென்று சமஸ்கிருதத்தைப் பேசினாலும் மக்கள் புரிந்துகொள்வார்களாம்! ஏனெனில் அவ்வளவுதூரம், பண்பட்டுப் போன மொழியாம்! இந்திய கலாசாரத்தையே பிரதிபலிக்கும் மொழியாம்! ஆகவே, அதனை இந்தியாவின் 'அரசியல் மொழி ஆக்கினாலும் ஆக்கலாம்' என்று தெரிவித்திருக்கிருர், டில்லி மந்திரி! அவர் தெரிவிக்கிருர், "இந்தியே பொதுமொழியென்று அரசியல் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், மக்கள் ஏகமனதாக விரும்பினால், அரசியலமைப்பில் எந்த மாறுதலையும் செய்து கொள்ளலாம்" என்று தெரிவித்திருக்கிருர். ஏனெனில், இந்தியைவிட எல்லா இடங்களுக்கும் பரவி, தெரிந்திருப்பது சமஸ்கிருத மொழியாம்!!

இவ்வண்ணம் வெளியிட்டவர், ஒரு ஏனோதானோ அல்ல—முக்கியமான மந்திரி! பட்டேலின் இடத்திலிருப்பவர்! உள்நாட்டிலாகா மந்திரியாக இருப்பவர்! கே. என். கட்ஜு—கூறுகிருர், 'இந்தியாவிலிருக்கும் எல்லா மொழிகளும், சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தவையாம்—அதனால் சமஸ்கிருதத்தையே பொதுமொழியாக்கிவிடலாமாம்!!

அனந்தசயனம் அய்யங்கார் தலைமை வகிக்க, கிருஷ்ணமாச்சாரி வரவேற்க, ஆந்திர நகரம் கண்டூரில் இவ்வாறும் பேசியிருக்கிருர். பேசியது எம்மொழியில் தெரியுமோ? சமஸ்கிருதத்தில் அல்ல! இந்தியில்! பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மறுக்கவில்லையா என்று கேட்பீர்கள்—எப்படி மறுப்பார்கள் — புரிந்தால்தானே! அவர்களுக்கு இந்தி தெரியாது!!

மகத்தான சம்பவம்

கொத்தலாவலை வெட்கித் தலை குனியும்படி செய்துவிட்டனர், இலங்கையில் இடர்ப்படும் தமிழர்கள்!

நாடி முறுக்கின்றி, நெஞ்சில் ஈரமுமின்றி, ஏனோதானோ என்றிருக்கும் டில்லி சர்க்காருக்கும் தலையில் குட்டிக் காட்டி, தமிழரிடம் உள்ள எழுச்சி எத்தகையது, ஒற்றுமை எவ்வளவு இருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டி விட்டனர், இலங்கையில் இழிவையும் இன்னலையும் தாங்கித் தவிக்கும் தமிழர்கள்.

ஜூலை 6-ல் மகத்தானதோர் 'வேலை நிறுத்தம்' நடாத்தி, இலங்கை சர்க்காரின் போக்கைக் கண்டித்துள்ளனர்.

இந்த அருமையான வேலை நிறுத்தத்தை நடத்திக்காட்டிய பெருமை இலங்கை ஜனநாயகக் காங்கிரசுக்குரியது.

இதன் தலைவர் தொண்டைமான், வேலை நிறுத்தம் பலாத்காரமல்ல என்பதையும், மனித உரிமைக்காக நடத்தப்படும் மாபெரும் அறப்போர் என்பதையும்எடுத்துரைத்து, இலங்கைசர்க்கார் திடுக்கிடும் வகையிலும், நாம் கேட்டுக் களிபேருவகை கொள்ளும் விதமாகவும் இதனை நடத்திக்காட்டியிருக்கிருர்.

ஐந்து லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்!

இலங்கைத் தோட்டத் தொழிலே அன்று முடங்கிவிட்டது.

எவ்வளவு 'துவேஷம்' ஊட்டப்பட்டிருப்பினும், சிங்களப் பாட்டாளி மக்களும், நீதி நியாயத்துக்குக் கட்டுப்படுவார்கள் என்பதை எடுத்துக் காட்டுவது போல, இந்த வேலை நிறுத்தத்தில் இருபதினாயிரம் சிங்களத் தோட்டத் தொழிலாளரும் கலந்து கொண்டனர். கொத்தலாவலை சர்க்கார், இந்த மகத்தான சம்பவத்தைக் கண்டு பாடம் பெறவேண்டும்.

ஐந்து இலட்சம் பாட்டாளிகளின் அணிவகுப்புச்சாமான்யமானதல்ல.

அடக்குமுறை வெறியினால் அவர்களின் உரிமை உணர்ச்சியை உருக்குலைத்துவிட முடியாது.

இந்த அணிவகுப்பு, அறப்போர் தொடுத்தால், இலங்கையின் அரசியல் வாழ்வுக்கே பெரும் கேடாக முடியும்.

ஆனால், பாடம் பெறமாட்டார் கொத்தலாவலை.

டில்லியின் சுபாவத்தை அவர் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிருர், தமிழரின் தவிப்புப்பற்றி டில்லி எந்த அளவுக்கு அக்கரை காட்டும் என்பதை அவர், நேரு குடும்பத்துக் குமரிகள் கலந்து கொண்ட நடனத்தின் மூலமே தெரிந்து கொண்டிருப்பார்!

காமன்வெல்த் எனும் கபடவேடதாரிகளின் கூடாரத்தில், இலங்கையும் இருக்கிறது, இந்தியாவும் இருக்கிறது.

காமன்வெல்த், நேரு பண்டிதருக்கு, பட்டாபிஷேகத்துக்கு மாம்பழக்கூடை கொண்டுவரும் உரிமை

யும் சலுகையும் தந்திருக்கிறது — வேறொன்றுமில்லை — இலங்கையில் காட்டப்படும் இழிவுகண்டு, காமன்வெல்த் நியாயம் பேசாது!

அமெரிக்காவோ, இலங்கையில் இடம் கிடைக்குமா என்று அகோரப் பசியுடன் இருக்கிறது. எனவே தான் கொத்தலாவலை சர்க்கார், அஞ்சாது அக்ரமம் செய்துவருகிறது.

அவதிக்கு ஆளானோரில் ஆயிரம் வடவரும் இல்லை.

தமிழரே தவிக்கின்றனர்—அவர்களின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற எண்ணம் இன்று நம்மையெல்லாம் வாட்டி வதைக்கிறது.

அவர்களுக்காகப் பரிந்து பேசும் மனம் உண்டு நமக்கு, ஆனால், அவர்களின் குறை போக்க, அதிகாரம், டில்லியில் சிக்கிக்கொண்டிருக்கிறது.

இந்த மாபெரும் வேலை நிறுத்தமாவது டில்லியைச் சிந்திக்கச் செய்யவேண்டும்.

வேலைநிறுத்தமூலம் வெளியான எழுச்சியும் ஒற்றுமை உணர்ச்சியும் கண்டு, கொத்தலாவலை சர்க்கார் புதுப்புது அடக்குமுறைகளைத் தேடவே துடிப்பர், விபரீதம் நேரிடுமுன்பு, டில்லி தன் திறமை முழுவதையும் பயன்படுத்தி, இலங்கைவாழ் தமிழர்களின் இன்னலைப் போக்க முன்வரவேண்டும்.

⊛

தாலமுத்து! நடராஜா!!

ஆம்! தாலமுத்து! நடராஜா! என்ற எழுச்சிக்குரல் கேட்கிறது—போர் துவங்கிவிட்டது — பொல்லாத ஆட்சி முறைக்கு எதிராகப் போர்! திராவிடம் வீறு கொண்டு எழுகிறது—கொடுங்கோலர்கள், தடிகளுக்குப் பூணிட்டவண்ணமும், துப்பாக்கியைத் துடைத்துவைத்தபடியும், சிறைகளைப் பெரிதாக்கும் திட்டம் வகுத்தபடியும் உள்ளனர். திராவிட விடுதலைப் படையினர், பெற்றோரிடம் விடைபெற்றுக் கொண்டு, கண்ணீரும், கனிவும் வழியும் காதலிகளைக் கட்டித் தழுவி முத்தமிட்டுவிட்டு, களம் நோக்கிக் கிளம்பிவிட்டனர்—தாலமுத்து! நடராஜா! என்று கூறியவண்ணம்.

ஆச்சாரியார் ஆட்சி அகோரப் பசியுடன் இருக்கிறது—இரத்த வெறிகொண்டு அலையும் புலிபோல் உறுமுகிறது!

திராவிடம் வாழ, திராவிடர் வாழ,—புலிக்குணமும், அதே போது நரித்தனமும் கொண்ட ஆட்சி முறையை குருதி கொட்டியேனும் எதிர்த்து ஒழித்தாகவேண்டும். சென்னை மாவட்ட மாநாடு, போர்முரசு கொட்டிவிட்டது. தி. மு. க. செயற்குழு தீர்மானம் தீட்டிவிட்டது — படை புறப்படுகிறது—நாட்டை மீட்கும் நல்லோர் கொண்ட படை! வாரீர், வாரீர், தோழர்காள், வளம், திராவிடம் பெற என்ற பரணி, கேட்கிறது.

வீரர்களுக்கு விருந்து! மமதை கொண்டோர் மருள்கின்றனர்! ஆச்சாரியாரின் சீடர்கள், இது வரை ராஜதந்திரமாக நடந்துவந்த ஆச்சாரியார், ஏன் இம்முறை, ஆழம் தெரியாமல் காலை விடுகிறார், என்று கூறி ஆயாசப்படுகிறார்கள். திராவிடத் தோழர்களே! முரசு ஒலிக்கிறது! படை கிளம்புகிறது, சேர வாரீர், சேர வாரீர்!

அதோ கருணாநிதியின் அழைப்பு —கல்லக்குடி ஆகுவோம், வாரீர்! டால்மியாபுரம் ஓர் அவமானச் சின்னம்; அதை நம் இரத்தத்தைக் கொண்டேனும் கழுவிடலாம், வாரீர் என்று அழைக்கிறார்!

இதோ சம்பத்—புறப்படுவோம் புதிய சாணக்கியத்தை எதிர்த்து ஒழிக்க — நெஞ்சு உரம் கொண்டோரே, நிமிர்ந்து நில்லுங்கள்—கொள்கைப் பற்றுக் கொண்டோரே படை வரிசையில் வந்து சேருங்கள்—அஞ்சேல்! வெற்றி நமதே என்று முழக்கமிடுகிறார்!

நேருவின் கண்டனச் சொல் கேட்டுக் கொதிப்படைந்த திராவிட மக்கள், தமிழகமெங்கும், ரயிலை, பகல் வண்டிகளை நிறுத்திக் கண்டனக் குரல் கிளப்புவோம், என்று ஜூலை 15 நாள் குறித்துள்ளனர்.

எங்கும் — எல்லா திக்கிலும் கிளம்புகிறது எதிர்ப்பு! இந்த எதிர்ப்பிலே, எமது பங்கு என்ன என்று கேட்டுப் பெறுவதை, பெறற்கரிய பேறாக எண்ணவேண்டும் — இதுபோன்ற எழுச்சிமிக்க போர்ச் சூழ்நிலை, இனி அமைவது கடினம் — அறப்போர் உள்ளம் கொண்டோரே! ஆண்மையாளர்களே! ஆரியத்தை அழித்தொழித்தாலன்றி தாயகம் வாழாது என்ற பேருண்மையைப் புரிந்துகொண்ட தோழர்காள்! இதோ களம்—இதோ போர்—இதோ நாட்டை மீட்கும் அறப்போர்—உமது பங்கு என்ன? எங்கே உமது பங்கு?

தாயகம் காணிக்கை கேட்கிறது! தந்தையர் நாடு கூவி அழைக்கிறது! தளைகளை உடைத்திட வாரீர், தருக்கரின் பிடியிலிருந்து என்னை விடுவிக்க வாரீர், என்று நம்மைப் பெற்றெடுத்து ஆளாக்கிவிட்ட பழம் பெரும் நாடு, திராவிடம் அழைக்கிறது! தாயகத்தின் அழைப்பைக் கேட்டு, படை வரிசையில் வந்து நிற்போரின் தொகை எவ்வளவு தான் பார்ப்போம், என்று கேலிப் புன்னகையுடன் பூசுரத் தலைவர், ஒருபுறம் நிற்கிறார்! தெரிகிறதா காட்சி! இதை நினைவிலே நிறுத்துங்கள்.

முன்னமோர் நாள் முப்புரிபலத்தால் இப்புரியில் ஆதிக்கம் செலுத்தலாம் என்றெண்ணி இறுமாந்து கிடந்தார் ஆச்சாரியார்—இந்தி எதிர்ப்பின்போது — சிறையில் இறந்துபட்டனர், தாலமுத்து, நடராஜன் எனும் இரு காளைகள்—இறுமாப்பு முறிந்தது, ஆட்சி கவிழ்ந்தது, இந்தி ஒழிந்தது! எனவே தான், தாலமுத்து! நடராசா! என்ற எழுச்சிக் குரலுடன் கிளம்புகிறது, போர்ப்படை!

நாட்டை மீட்கும் போர் ஆரம்பமாகிவிட்டது. நாட்டை மீட்கும் போர் நடைபெறும்போது, வீடு வாசல், துணைவி குழவி, தொழில் சுகம், இவைகளுக்கு அல்ல நாம்! நாட்டுக்கு, அதன விடுதலைக்கு! நம்மை நாமே அர்ப்பணித்துவிட்டோம், அறப்போர்க் களம் வாரீர்! வெற்றி பெற்றுத் தாரீர்! வெல்க திராவிடம்!

[மும்முனைப் போராட்டத்துக்காக பொதுச்செயலாளர் கழக ஏடு, 'நம் நாடு' இதழில் 13—7—53-ல் வெளியிட்ட அழைப்பு]

⊛

திராவிடநாடு

காஞ்சி] 11—7—54 [ஞாயிறு

கணக்குப் பார்க்கிறோம்

★

வீரர்காள்! விடுதலைப் போர்ப் படையில் நின்று தாயகத்தின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகளைத் தூள் தூளாக்கிடும் ஆற்றலுடன் போரிட்டு, தியாகத் தழும்பேற்று நிற்கும் தீரர்காள்! மாற்றாரின் எதிர்ப்புரை, விளக்கமிலாதாரின் வீணுரை, பொச்சரிப்புக்காரரின் பொல்லாங்கு மொழி என்பவைகளைத் துச்சமெனக் கருதி, உள்ள உரத்துடன் நின்று, கொண்ட கொள்கைக்காக, எடுத்துக் கொண்ட காரியத்துக்காக, நெஞ்சில் நிறைந்திருக்கும் இலட்சியத்துக்காக, அரும்பாடுபட்டு, அடக்குமுறைக் கொடுமைக்கு மார்காட்டி நின்ற மறவர்காள்! வாலிபத் துடிப்பு, வகையறியாததால் வந்த படபடப்பு, ஆழமறியாது காலை விடும் போக்கு, அசட்டுத்தனமான ஆவேச உணர்ச்சி, என்றெல்லாம், எல்லாமறிந்தவர் என்று தமக்குத் தாமே விருது அளித்துக்கொண்ட விசித்திர சித்தர்கள் கூறிய காலை, உரிமைப் போரின் மாண்பறியாதாரின் வெற்றுரை ஈதெனக்கண்டு, அவர்தம் பேச்சு பொருளற்றது என்று தெளிந்து, தியாகப்பாதையிலே தீரமாக ஏறுநடை போட்டுச் சென்ற என் அரும் தோழர்காள்! வீழ்ச்சியுறும் தமிழகத்தில எழுச்சி வேண்டும் என்று எக்காளமிட்ட புரட்சிக் கவிஞர் எதிர்பார்த்த எழில் நிறை காட்சியாகி, தாழ்ந்த தமிழகத்தைத் தலைநிமிரச் செய்திடும் ஆண்மையைக் காட்டி, அச்சத்தை ஓட்டி, சந்தேகத்துக்குச் சாவோலை நீட்டி, வஞ்சனை வாட்டியபோதும், சூதுமதியினர் கேடு செய்யும் நோக்குடன் நெருங்கிய போதும், தயங்காமல் தளராமல் நின்று, திக்கெட்டும் தீயர்கள் நின்று பகை கக்கினாலும், தித்திக்கும் குடும்பவாழ்வையே இழக்க நேரிட்டாலும், களம் நோக்கிக் கிளம்பிய நாங்கள், சூளுரை எடுத்துக் கொண்ட நாங்கள், சோர்வடைய மாட்டோம், பரணி பாடிவிட்டோம், இனி ஒன்று எமது தோளிலே வாகை, இல்லையேல் உயிரற்ற எமது உடலின் மீது தோழர்களின் கண்ணீர், இதுவே எமது உறுதி, எனக் கூறி, பெருமிதத்துடன் சென்று, பேயர் ஏவிய கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு, பெற்றோம் மற்றோர் வெற்றி! என்று பண்பாடிய திண்தோள் தோழர்காள்! திராவிடச் செம்மல்காள்! சேரன் வழி வந்தோரே! சோழ நன்னாட்டுக் குமரர்காள்! பாண்டிய பரம்பரையினர்காள்! விழிப்படைந்த திராவிடத்தின் வீறுகொண்ட அடலேறுகாள்! வணக்கம், வணக்கம், வாழ்த்துகிறேன், வீரம் வளர்க வெற்றிகள் பெருகுக, இலட்சியம் ஈடேறுக, என்று கூறி.

ஜூலை 15—நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், செங்கரும்பென இனிக்கும் நன்னாள் — தாப்பறை அறைவர், கடிப்பு வீரர்கள், போர்ப்பறை கேட்டிடின் புறம் காட்டி ஓடுவர், ஏற்புடைச் செயல் செய்தறியார், என்று குறை மதியினர் கூறினர்—களம் காண்பீரோ! கண்டிடின் கலக்கம் கொண்டிடாது கடும் போரில் ஈடுபடவல்லீரோ! என்று கேட்டுக் கேலி பேசினர் — விலாவிலே வேல்போன்றிருந்தது அவர்தம் பேச்சு—சிங்காரத் தமிழோசை கிளப்பிடுவீர், அஃதேயன்றி சிலம்பெடுக்கும் சிங்கத்தமிழர் ஆவீரோ, போர்பற்றிப் புதுப் புதுக் காதைகள் தீட்டுவீர், போர் வந்துற்றால் முன்னேறித் தாக்கும் முறை அறிவீரோ, எதிரி வளைத்துக்கொண்டால் அதனைப் பிளந்தெறியும் போர் முறை கற்றீரோ, பேசக் கற்றுக்கொண்டீர் பிரமாதமாக, கூரற்ற வாள் நீவிர்! பாய்மரமற்ற தோணி நீவிர்! புலித்தோல், ஆனால் பசுங்கன்றுகள்! பச்சை தேடிச் செல்லுங்கள், போரின் பயங்கரத்துக்கு ஈடுகொடுக்கும் பக்குவம் உமக்குக் கிடையாது என்று குத்திக் குத்திப் பேசினர், களம் நோக்கிச் செல்லும் வீரக்கோமான்களல்ல, கலாம் விளைவிக்கும் நோக்குடன் காகிதக் கணைகளை ஏவிடுவோர்—எனினும், இத்தகு புன்மொழிகளுக்குப் பொருள் என்ன, கூறுவதன் நோக்கம் யாது, என்பது பற்றி அறிந்துகொள்ள எண்ணுவதுகூடக் காலக் கேடு, என்று கருதி, கடமையைக் கலங்காது செய்வோம், பலன் கிடைத்தால் மகிழ்வோம், கடமையைச் செய்யும்போது இறந்துபட நேரிடினும், புன்னகை உதட்டிலே பதிந்திருக்கும் நிலையில்தான் சாய்வோம், என்ற உறுதிப்பாட்டுடன் அறப்போரில் ஈடுபட்டீர்கள், சென்ற ஆண்டு, ஜூலைத் திங்கள்.

ஓராண்டு உருண்டோடிவிட்டது! இவ்வளவு விரைவிலா!! ஆம்! மிக விரைவாகத்தான்! காலம், மெள்ள மெள்ள நகரவில்லை, கடுவேகத்தில் செல்கிறது! ஓராண்டு ஆகிவிட்டது!! மற்றோர் ஜூலை 15 இதோ காண்கிறோம்.

சென்ற ஜூலை 15ல், நம்மில் பலர், சிறையில் தள்ளப்பட்டிருந்தோம்! பலர், அடக்குமுறை பதித்த தழும்புகளைத் தடவிப் பார்த்துக் கொண்டிருந்தோம். திராவிடமே, அகன்ற விழியுடன் நின்றது! இதென்ன புயல்! எப்படிக் கிளம்பிற்று போர் வாடை! யார் நடத்திச் சென்றார்கள் இந்த அணிவகுப்பை! என்றெல்லாம் ஆட்சியாளர்கள் எண்ணினர்.

அலட்சியம்! ஆத்திரம்! அச்சம்! அயர்வு!!—இங்ஙனம் இருந்தது, சர்க்காரின் போக்கும் நடவடிக்கையும்.

எண்ணினோம், துணிந்தோம்—நாம்.

எடுத்தனர் தடியை, கொடுத்தனர் மண்டையில், கொட்டினோம் குருதி, வெட்டுண்ட பனையாயிற்று ஆள்வோரின் போக்கு.

ஜூலை 15ல் ஒரு பெரும் போர்க்களம் அமைக்கப்படும், அனைவரும் இப்போதிருந்தே அதற்கான பயிற்சியில் ஈடுபடுங்கள், பேச்செல்லாம் களம் பற்றியதாகவே இருக்கட்டும், நினைப்பெல்லாம் போர் குறித்தே செல்லட்டும், நடை முறுக்காகட்டும், தசைக் கட்டுகளை வளமாக்

குங்கள், மீசையை முறுக்கி விடுங்கள், வேல் வடித்துத்தரச் சொல்லுங்கள், வாளைக் கூராக்கிக் கொள்ளுங்கள், சல்லடம் கட்டுங்கள், முரசு கொட்டுங்கள், கண்களிலே ஓர் கடும் பார்வை பிறக்கட்டும், சான்றோர் ஓர் பெரும் போர் மூளப் போகிறது என்பதை உணரட்டும், — என்று பேசிப் பேசி, இந்தப் போரிலே நாம் ஈடுபடவில்லை.

மாறாக, நான், அது சமயம் ஒவ்வோரிடத்திலும், திரித்துக் கூறுவோரும் சிதைத்துப் பொருள் கொள்வோரும், பலர் உளர், என்று தெரிந்திருந்தும், தி. மு. க. போர் தேடி அலையாது—ஏதாவது போர் கிடைத்தாக வேண்டுமே என்ற மன அரிப்பு நமக்குக் கிடையாது, போரிட்டுத்தான், வளர்ச்சி பெற்றாக வேண்டும் என்ற பலமற்ற, பரிதாபகரமான நிலையிலே, தி.மு.க. இல்லை, என்று வெளிப்படையாகவே கூறிவந்தேன்—அதற்காக நான் கேலி செய்யப்பட்டது மட்டுமல்ல, உங்கள் வீரமும் இழித்துரைக்கப்பட்டது. ஆனால்......!! அந்த ஜூலை 15! வருக! கூடுக! காண்க! புகழ்க! காணக்கிடைக்காத காட்சி! என்று விளம்பர ஆர்ப்பரிப்பு செய்ததல்ல, காலம் கூட்டிவந்து காட்டிற்று, களம் கண்டோம்.

படை வரிசையும் அதிலே பயிற்சியும்; போர்த்திறனும் அதற்கான முயற்சியும், இல்லாததால், நாம் போர் வேண்டாம் என்று பேசுகிறோம்,—அரை டஜன் பேர் வழிகள், அவர்கள் கட்டும் ஆகாயக் கோட்டைகள்-இவைதாம் தி.மு.க-என்று எண்ணிக் கொண்ட நண்பர்கள், ஏசினர்.

நாம், திராவிடத் தனிநாடு காண வேண்டுமெனும் பெரும் இலட்சியத்துக்காகப் பணியாற்றுகிறோம்—அந்த இலட்சியத்தை நாம் எளிதிலே பெறமுடியாது என்பதை அறிந்திருக்கிறோம், அதற்காக நடத்தப்படவேண்டிய போருக்குத் தக்கவர்களாக நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்ளும் பணி சாமான்யமானதல்ல என்பதையும் உணர்ந்திருக்கிறோம், இறுதிப் பெரும்போரில் ஈடுபடு முன்னர், நாம் எத்தனை எத்துணை எதிர்ப்புகளைச் சமாளித்தாகவேண்டும் என்பதையும் தெரிந்திருக்கிறோம், அந்த இறுதிப்போர் எவ்வளவு குருதி கேட்கும், எத்தனை குடும்பங்களைப் பலி கேட்கும், எத்தனை வீர இளைஞரின் உயிரைக் குடிக்கும் என்பதுபற்றியும் அறிந்திருக்கிறோம். வரலாறு காட்டும் பாடத்தை மறந்தோமில்லை! தாய்நாட்டை மீட்டிட ஆங்காங்கு நடைபெற்ற அரும்பெரும் போராட்டக் காதைகளைப் படித்து மறந்துவிட்டோமில்லை! இரத்த ஆறுகள் ஓடின! பிண மலைகள் குவிந்தன! பெற்ற தாய் மனம் பதறப்பதறப் பிணமாக்கப்பட்ட குமாரர்கள்! உடன்பிறந்தான் ஓலமிட்டு அழ துண்டாடப்பட்ட அண்ணன்! சூட்டிய மலரையும், பதித்த முத்தங்களையும், பேசிய காதல் மொழிகளையும், பொறித்த வடுக்களையும், எண்ணி எண்ணி விம்மிடும் வீராங்கனையை விட்டுப் பிரிந்து வெஞ்சமரில் வீழ்ந்துபட்ட வீரன்! விடுதலைப் போர், அம்மவோ! விளையாட்டுக் காதையல்ல! அதிலும், பிற நாடுகளிலே நடைபெற்ற விடுதலைப் போர்களுக்கும், இங்கு, நாம் ஈடுபட்டாகவேண்டிய விடுதலைப் போருக்கும், பலப் பல துறைகளிலும், முறைகளிலும் மாறுபாடு நிரம்ப உண்டு!

நாம்! — இதற்குப் பொருள் காணவே, பெருமுயற்சி தேவைப்படுகிறது.

நாடு!—இது என எடுத்து இயம்புவதற்கே, புலமை தேவைப்படுகிறது! உண்மை, புதைபொருளாகிக் கிடக்கிறது. நம் வரலாறு, தேய்ந்துபோய், உருவமற்றுக் கிடக்கிறது. நமது இனத்தவரோ, சினம் கொண்டிடக் காண்கிறோம், உண்மையைச் செவி மடுக்கும் போதே!

விடுதலைப் போர், பயங்கரம் நிறைந்தது—திராடத்துக்கான விடுதலைப்போர், பயங்கரம் நிரம்பியது மட்டுமல்ல, விசித்திரம் பல உள்ளடக்கியதாகவும் உளது. நிலைமை அப்படி! வீரம் இருக்கிறது எங்கும், ஏராளமாக — ஆனால் விழலுக்கு இறைத்த நீராக்கப்படுகிறது. அறிவு இருக்கிறது, அவனி கண்டு மதிக்கத் தக்கதாக, ஆனால் அது ஆகாத வழியிலே செலுத்தப் படுகிறது. இந்நிலையில், விடுதலைப் போர் நடாத்துவது என்றால், வீரம் மட்டும் போதாது, வீரம் இருக்குமிடமெல்லாம் கண்டறியப்பட வேண்டும், உள்ள படை போதாது, படையில் ஆற்றல் காட்டவல்லவரை எல்லாம் கண்டறிந்து கொண்டு வந்து சேர்த்தாக வேண்டும், காடுகள் கூடாரங்களாயின, இல்லங்கள் பயிற்சிக் கூடங்களாயின, என்று கூறத்தக்க விதமான நிலை ஏற்படுவதுண்டு விடுதலைப் போர்க்காலத்தில், இதுவும், இதனினும் மேலான விளக்கமும், காணவேண்டியவர்கள் நாம்!

எனவே தான், போர், போர் என்று அலைவது கூடாது — எதற்காகவேனும், எப்படியேனும், எம்முறையிலேனும் போர் நடாத்தினால்தான், கழகம் வளர்ச்சி அடையும் என்று கருதுவது, தவறு, என்று கூறி வந்தேன் — நோக்கம் புரியாதோர் சுடுசொல் வீசினர், கவலை கொண்டேனில்லை, கோபம் கொண்ட உம்மையும் கூட வேண்டிக் கேட்டுக் கொண்டேன், "அவர்களை மன்னிப்பீராக! நமது மாண்பறியாதாரின் பேச்சுக்காகக் கோபம் கொள்ளற்க!" என்று.

ஜூலை 15!—நம்மையே திடுக்கிடச் செய்து விட்டது!!

போர் ஏன்? எதற்கு எடுத்தாலும் போர் தானா? என்று பேசிக் கொண்டே இருந்தோம், ஆனால், மும்முனைப்போர் மூண்டு விட்டது! முப்புரியினரில் மூதறிஞர் என்று, எப்புரியினரும் ஏத்தி ஏத்தித் தொழுது வந்தனர் ஆச்சாரியாரை—அவருடைய தவறு, மமதையால் ஏற்பட்ட மதியீனம், ஆணவத்தில் நெளிந்த அநீதி, நம்மை மும்முனைப் போரில் கொண்டு போய் நிறுத்திற்று! சென்றோம்! களம் கண்டோம்!! அதன் கடுமை கண்டு திகைத்தோமில்லை — நின்றோம் — வென்றோம். எப்படி? நாம் தான் போர் வேட்கை அற்றவர்களாயிற்றே! உள்ளுரை உண்மை தெரிகிறதா! நாம், போர் குறித்துப் பேசிக் கொண்டில்லை — உண்மை — ஆனால் போர்த்திறன் பெற்றிருக்கிறோம்! ஜூலை 15 இதைத்தான் நாடு அறிந்திடச் செய்தது.

அவள் மனதைப் பாகாய் உருக வைப்பேன், என் இசைத் திறனால்.

பேசும் புறாவே! என்பேன், எழுதொணாத ஓவியமே, என்னை வாழ்விக்க வந்த மாமருந்தே! வையகத்தின் அழகுப் பெட்டகமே! நடமிடும் மின்னலே! தேன் தரும் தென்றலே! மாசிலா மணியே! மணிவிளக்கே! பேசும் பொற்சித்திரமே! இடைதுவள, கண்கள் களிநடமிட, ஆடி அசைந்து வந்து என் உள்ளமதைக் கொள்ளை கொண்ட நவமணிப் பதுமையே! நயன சிங்காரி! நடை அலங்காரி! உருகி உடல் கருகி உள்ளீரல் பற்றி அவியாது எறியும் காதல் கணலில் என்னைத் தள்ளிய, தத்தைமொழியாளே! இச்சைக்கு இனியவளே! இன்பவல்லி! —என்றெல்லாம் கொஞ்சு மொழி வீசுவேன், காதற் பார்வை காட்டுவேன், இடையிடையே என் தாபத்தை எடுத்துக்காட்ட பெருமூச்செறிவேன், அவள் என் விண்ணப்பத்தை ஏற்கும் வரையில், கீதம் பாடுவேன், அவள் சதங்கை ஒலியையும் நுதலின் ஒளியையும், உடலின் வனப்பையும், ஒய்யாரத்தையும் எடுத்துக் கூறிக் கூறி, அவளை என்னவளாக்கிக் கொள்வேன், என்று திட்டமிட்டு, பட்டுடை அணிந்து பல ஏடு புரட்டி முறைகளைக் குடித்து, கோமான் போல் நடந்து, கோமளவல்லியிடம் சென்று, குளறி, கூத்தாடி, உளறிக் கொட்டி, அவள் கெக்கலி செய்யக் கண்டு வீரண்டோடும், வீணனும் உண்டு—கண்ணைக் கண் கௌவ, நெஞ்சுடன் நெஞ்சு உறவாட நின்று, எண்ணத்தைக் குறுநகையால் வெளியிட்டு, வெற்றி பெற்று, கானம் பாடும் கிளியும் குயிலும், ஆடிடும் மயிலும், அழகு மணிப் புறாக்களும், கோலம் செய் சோலையிலே, அவளை ஆரத் தழுவிப் பேரின்பம் துய்க்கும் வெற்றி வீரனும் உண்டு.

காதலில்மட்டுமல்ல, களத்திலேயும் இவ்விரு வகையினர் உண்டு. நாம், திட்டம் தீட்டிவிட்டு, திறம்படச் செயலாற்றத் தெரியாததால் கோட்டை விட்டுவிட்டு, கொட்டாவிவிடும் ஏமாளிகளாக இருக்க மறுக்கிறோம், போரில்!

முற்றுமுனைப் போராட்டம்—திட்டமிட்டுக்கொண்டு கிளம்பி, காதல் தேடி அலைந்த நிம்மப்பன் கதை போன்றதல்ல. கண்ணோடு கண் பேசிய கலை! ஆம்! ஜூலை 15, எதிர்பாரா முத்தம்! இன்பத்துக்கு ஓர் அழைப்பு!

அன்று ஓர் அரும்போர் துவக்கம் என்று நாமும் நாடும் கண்டுகொள்ளத்தக்க குறிகள் பளிச்செனக் காணப்படவில்லை.

ஆச்சாரியார், அறிவுக்குப் பொருந்தாததும், திராவிட இனத்துக்கு ஆகாததுமான ஓர் கல்மூடித் திட்டத்தைக் கல்வித் துறையில் புகுத்தினார், நாம் கண்டித்தோம், நாடு கண்டித்தது, நல்லவர்கள் அறிவுரை கூறினர், ஆச்சாரியார் கேளாக் காதினரல்லவா, கேட்க மறுத்தார். தோழர் சம்பத் தலைமை தாங்கி ஓர் அறப்போர் நடாத்துவது என்று முடிவு செய்தோம். ஆச்சாரியார் இல்லத்தின் முன்பு, அறப்போர் என்றோம் அதற்கான 'முடிவு' எடுக்கச் செயற்குழு கூடிற்று — சென்னைக் களம் சம்பத்திடம், திருச்சியில் டால்மியாபுரம் எனும் அவமானச் சின்னத்தைத் துடைத்திடும் போருக்கான களம், கருணாநிதியிடம் அன்புக்குரிய இவ்விரு தம்பிமார்களுக்கு உற்ற துணைவர்களாக இருக்கும் அன்பழைப்பு உங்கட்கெல்லாம்!

நான் இந்த அன்பழைப்பு விடுத்தேன்—அன்றிரவே ஆச்சாரியார் சர்க்காரின் அன்பழைப்புப் பெற்றேன், களம் செல்ல வேண்டிய சம்பத்தும், நாவலர் நெடுஞ்செழியனும், நடராசனும், மதியழகனும், உடன்வர, சிறை சென்றேன். களம், உம்மிடம்! போர்முறை வகுக்கும் பொறுப்பு உங்களிடம்! கழகத்தின் கட்டுப்பாடும் கண்ணியமும் காப்பாற்றப்பட வேண்டிய கடமை, உங்களிடம்! நாங்கள் சிறையில்! சென்ற ஆண்டு ஜூலை 15-ல்!! இந்த ஆண்டு, இதே ஜூலை 15-ல், வெளியே இருப்போம், வெற்றிக் களையுடன் உலவுவோம், களத்தின் கதைகளைப் படிப்போம், கடும் போரில் ஈடுபட்ட வீரர்களை வாழ்த்துவோம், என்று, எண்ணினோமா! அங்ஙனம் கூற முடியாது! உண்மையைக் கூற வேண்டுமானால் —இந்த நன்னாளில் உண்மையைக் கூறுமளவிருக்க இயலுமா — நான் சிறிதளவு அச்சமடைந்தேன்—முற்றுமுனைப்போர் முழுப் பொலிவுடன் விளங்குமா, சர்க்காரின் கடுமையான நடவடிக்கைகளால் முறிந்து படாது நிற்குமா, என்றெல்லாம் உங்கள் வீரத்தையும், செயலாற்றும் திறனையும் அறியாதவனல்ல நான், ஆனால் ஆச்சாரியார் கோபம் தலைக்கேறினால் எப்படி எப்படி மாறிவிடுவார், என்பதை அதிகமாக அறிந்திருந்ததால்.

கலக்கத்துடன், சிறை சென்றோம்—ஓரிரவு கழிந்தது — காலை மலர்ந்தது. எமது நெஞ்செலாம் வீரமூட்டும் செய்திகள் வந்தன, குவிந்தன, கண்கள் ஒளிவிட்டன, ஏறு நடைதான், சோறு கிடைக்காத சிறையில்!

களத்திலே நின்று நீவிர் ஆற்றிய அரும்பணி கேட்டோம், இத்தகு வீரர் குழாத்தில் இடம் பெறும் வாய்ப்புக் கிடைத்ததே என்றெண்ணிப் பெருமை அடைந்தோம்.

ஆச்சாரியார் வீட்டின் முன்பு அறப்போர், நடைபெற்றது, ஆர்வம் குன்றவில்லை— ஆளவந்தார் ஆர்ப்பரிப்பு வலுத்தது, நமது தோழர்களின் அமைதி குலையவில்லை —தடியடி, கண்ணீர்ப் புகை—எதுவும் அறப்போரின் தரத்தையும் திறத்தையும் குறைத்திடவில்லை.

வருகிறார்கள் வீரர்கள்! உள்ளே வருகிறார்கள், திராவிடத்துக்கு வாழ்வளிக்கும் தீரர்கள்! நுழைகிறார்கள். அணிஅணியாக! காண்கிறோம் சிறையில், பெறுகிறோம் புத்தார்வம், பேசவில்லை, பார்க்கிறோம், ஆனால், அந்த ஒரு விநாடிப் பார்வையில், என்னென்ன பேசிவிட்டோம், எப்படி எப்படிப் பேசிக்கொண்டோம்! எண்ணும் போதே வீடு கசக்கிறது!!

சென்னையில் இது — திருச்சி—தயங்குமா!— கல்லக்குடிப்போர் — கடுமையான அளவில்—கருணாநிதி சிறையில் — கண்ணதாசனுக்கு பலமான அடி—தர்மலிங்கம் தலை தப்பியது தம்பிரான் புண்யம், பலர், பலப்பலர், சிறையில், மருத்துவமனையில்—ஆனால் அவமானச் சின்னம் மறைந்தது, அழகு தமிழ்

தவழ்ந்தது, கல்லக்குடி காட்சி அளித்தது.

துப்பாக்கி, ஆளவந்தார்க்குத் துணை நின்றது. உயிர் குடித்தது. திராவிடமே துடித்தது. ஆருயிரை இழந்தனர், இழக்கொணா இன்பத் திராவிடம் காணத் தம்மைத்தாமே அர்ப்பணித்துக்கொண்ட அருமைத் தோழர்கள்.

சென்னை—திருச்சி-இம்மட்டோ —இல்லை, இல்லை, நாடெங்கும் போர், வீடெல்லாம் வீரர்கள், பேச்செல்லாம் இப் போர் குறித்தே, இதழ்கள் யாவும் இச் செய்தி தாங்கியபடியே, எமது எண்ணமெல்லாம், உமது செயல் குறித்தே! மும்முனைப் போராட்டம் முழு உருவெடுத்து, சர்க்காரைத் திணற அடித்து, வேறுபல கட்சிக்காரர்களையும் நம்முடன் உறவாட வைத்து, வெடித்தது காண் எரிமலை! பொங்கி வழிகிறது காண் வீரக் கனல்!! என்று எவரும் வியந்துரைக்கத்தக்க வகையிலே, நடைபெற்றது. துப்பாக்கி தூத்துக்குடியில் பேசிற்று, உயிர் குடித்தது, உணர்ச்சி மேலோங்கிற்று. சிறைப்பட்டனர் தோழர்கள், சிந்தை நைந்ததா — திருவிடத்தவருக்கா! தீரருக்கா! கொள்கை உணர்ந்த வீரருக்கா!!

மும்முனைப் போராட்டம் உண்மையிலேயே, நமது கழகம், எத்துணை வலிவுடன் வளர்ந்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டும் எழிலோவியம்.

பூத்துவரும் புரட்சி எத்தகையது என்பதை பழுதுபட்ட பார்வையினரும் தெரிந்து கொள்ளச் செய்த மகத்தான சம்பவம். பூங்காவில் உலவுவான், பொன்னார் மேனியனுடன் குலவுவான், ஆனால் போர் எனிலோ, பொங்கிஎழுவான், சிங்கமாவான், வெற்றி காண்பான் —என்ற பழந்தமிழ் நெறியின் ஓர் மறுமதிப்பாயிற்று ஜூலை 15ல் தோற்றமளித்த போர்க்காட்சி; சிற்றூர் பேரூர்கள் என்ற பாகுபாடின்றி, அறப்போர் வீரர்கள் கிளம்பினர், அடக்கு முறைக்கு ஆளாயினர். கையும் காலும், கண்ணும், உயிரையுமே கூட, பலி கேட்டது அடக்குமுறை — அளித்தனர் — தாயக விடுதலைக்காகக் காணிக்கை செலுத்துகிறோம் என்ற பெருமகிழ்ச்சியுடன்.

புதிய கல்வி திட்ட எதிர்ப்பு அறப்போர், அத்திட்டத்தை எதிர்த்து கழகத்தவரல்லாதவர்களையும், வீரப்பணியாற்ற வைத்தது.

கல்லக்குடி கான நடத்தப்பட்ட அறப்போரும், அதிலே ஈடுபட்டு கடும் தண்டனைகளுக்கும் கொடிய அடக்குமுறைகளுக்கும் ஆளான நமது தோழர்கள் காட்டிய தியாகமும், நமது போர்ப் பிரச்சினையை மதியாது இருந்து வந்தவர்களையும், மதிவாணர்களாக்க உதவிற்று.

நேரு பண்டிதரின் நாவடக்கமற்ற போக்கைக் கண்டிக்கும் ரயில் நிறுத்தப் போரோ, இந்திய துணைக் கண்டத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது—வெளி நாடுகளிலேயும் விஷயம் சென்றது.

மும்முனைப் போரில், எம்முனைப் போர் சிறப்பளிப்பது என்ற பிரச்சினைக்கே இடமின்றி, எழுச்சி ஒன்று கலந்து ஓர் உன்னதமான பேருருக்கொண்டது! விழிப்புற்ற திராவிடம் அது! விரண்ட ஆச்சாரியார் விதவிதமான பாணங்களைப் பூட்டினார் — அனுத்தார் — ஆர்ப்பரித்தார்—சபித்தார் — சாடினார்—எனினும் அவருடைய ஆணவப்போக்குதான் சடசடவெனச் சாய்ந்து வரலாயிற்று.

நாடெங்கும் குமுறல் — சட்டசபையில் எதிர்ப்புச் சூறாவளி — எங்கும் கண்டனமாரி—நாடெங்கும் கழகத்தினைப் பற்றியே பேச்சு—பத்தாண்டுக் காலம் பன்னிப் பன்னிச் சொன்னாலும் ஏற்படுத்த முடியாத அளவு ‘பிரச்சார’ பலம் கிடைத்தது, நமது தோழர்கள் கொட்டிய குருதி காரணமாக.

மும்முனைப் போராட்டத்தில், எவ்வளவு குறைத்து மதிப்பிட்டாலும் ஐயாயிரவர் ஈடுபட்டனர்—சிறை சென்றனர், என்றே கூற வேண்டும். இன்று அந்தச் செம்மல்களை எங்கு சென்றாலும் காணலாம்! வெற்றிப் புன்னகையுடன் வீர உலா வருகிறார்கள்! நாட்டுப் பற்றெனும் நல் விளக்கை அவர்கள் ஏற்றி வைத்திருக்கிறார்கள். தியாகத் தீயிலே புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கக் கம்பிகளை இன்று எந்தச் சிற்றூரிலும் காணலாம்.

ஈ என்று ஏசினார், எறும்பு என்று கேவலமாகப் பேசினார், பதவி நிலையானது, பதட்டப்பேச்சு பாராள உதவும், போலீஸ் அரண் எந்த எதிர்ப்பையும் அழித்தொழிக்கும் என்றெல்லாம் மனப்பால் குடித்த மறையவர் திலகம்!

கணக்கைத் தீர்த்துக் கட்டி விடுகிறேன்! என்று ஆத்திரத்தைக் கக்கினார்! இதுகளைப் பூண்டோடு ஒழித்துக்கட்டா முன்பு ஊண் கொள்ளேன் உறங்கேன் என்று ஆர்ப்பரித்தனர் அடிவருடிகள்.

அடக்குமுறை குருதியைக் கொட்ட வைத்தது, ஆச்சாரியாரின் பேச்சு, குறுநகையைத்தான், கொள்ளச் செய்தது.

யார், யாருடைய கணக்கைத் தீர்த்துக்கட்டுவது!—கேட்டன ஆயிரமாயிரம் கண்கள்! அந்த வீரர்தம் மனக்கண் முன் திராவிடர், தீயோர் தீண்டாதபோது, எவரெவருடைய கணக்குகளைத் தீர்த்துக் கட்டி இருக்கிறார்கள் என்ற பெருங்காதைகளெல்லாம், நிழலுருவில் தெரியலாயின!

இதோ இன்று ஆச்சாரியார் கொல்லைப்புறம் நுழைந்து கோலை எடுத்துக் கொண்டு, பல்லிளித்துப் பலம் சேர்த்துக் கொண்டு, சொல்லை வீசி நம்மை வெல்லப்பார்க்கிறார், ஆனால், அன்றோர் நாள், திருஇடம் அடிமைப்படாமுன்னர், திராவிட அரசு புகழொளி வீசி இருந்து வந்த காலை, நமது மரக்கலங்கள் எழு கடலிலும் வெற்றிக் கொடியுடன் சென்ற நாட்களிலே, நமது முத்து, பவளம், சந்தனம், அகில், பட்டு பட்டாடை, மயில்தோகை, எனும் இன்னோரன்ன பொருள்களைக் கண்டு சாவகமும் கடாரமும், யவனமும் சீனமும், வியந்து நின்ற போது, அரசர் எனும் விருது பெற்ற ஆணவக்காரர் இருவர், கனகன் விஜயன் எனும் பெயரினர் தமிழரை இழித்துரைத்தனர் என்பதற்காக, தானை கொண்டு வடக்கு சென்று, கங்கைக்கரையில் அக் கசடரைத் தாக்கித் தோற்கடித்து, அவர்தம் தலைமீது கல் ஏற்றி செருக்களச் சிங்கம் சேரன் செங்குட்டு

வன் கொண்டுவந்தகாட்சி தோன்றுமலிருக்குமா—அக்காட்சி தோன்றியதும், குன்றெடுக்கும் நெடுந்தோளர், கொடுமை களையக் கொடுவாளெடுக்கும் இரணகளச்சூரர் வழி வழிவந்தவர் நாம் என்ற மன எழுச்சி ஏற்படாமல் இருக்குமா! ஓமகுண்டத்துப் புகையும், யாகப் பசுவின் ருசியும், ராஜமாளிகை விருந்தும் மட்டுமே காதைகள் என்று எண்ணிப் பூரிப்படையும் பூசுரத் தலைவருக்கு, திராவிடரின் வீரக் காதை எப்படித் தெரியும், புரியும்! அவர் அறிந்துள்ள சக்ரவர்த்தி திருமகனார்களுக்கும் திராவிடம் கண்ட அரசிளங் குமாரர்களுக்கும் ஒப்பிட்டு உரைத்திடவே இயலாதே! அருள் பெற்று அமளியில் வெற்றி காண்போர், அவர் அறிந்த காதைகளில் காணப்படும் வீரர்கள்—வீரம் காட்டி வெற்றிதேடுவோர், நமது மூதாதையர்.

ஆச்சாரியார் இதனை அறியாது கூறினார், கணக்கைத் தீர்த்துக்கட்டிவிடுவேன், என்று! சிறுநரி, புதருகே கூறிற்றாம் சிங்கத்தின் மண்டையைப் பிளந்து உமக்கெல்லாம் இரத்ததானம் தருவேன் என்று, குட்டிகளிடம்!

கணக்குத் தீர்க்கும் காலம் பிறந்தது! கணக்கு தீர்க்கப்பட்டும் விட்டது! ஆச்சாரியாரின் கணக்கைத்தான் அருந்திராவிடத் தோழர்கள் தீர்த்துக்கட்டி இருக்கிறார்கள்! எங்கே அவர்? அரசோச்சும் நிலையிலா! இல்லை, இல்லை, அரிகதா காலட்சேபம் செய்யும் பாகவதர் நிலையில்! ஆர்ப்பரிக்கிறாரா? இல்லை. இல்லை! அமைதி, அமைதி! சாந்தோபதேசம், செய்கிறார்! அவர் புகுத்திய திட்டம்? தீர்த்துக்கட்டிவிட்டார்கள் தீரர்கள்!! செத்தது, புதைத்தார் சுப்ரமணியம், இரண்டு சொட்டுக் கண்ணீரும் விட்டார்—சிரமப்பட்டு.

அறப்போர் வெல்லும், என்பதற்குச் சாலச் சிறந்த சான்று கண்டோம்.

ஆணவ அரசு அழிந்துபடும் என்பதற்குத் திட்ட வட்டமான எடுத்துக் காட்டும் கிடைத்து விட்டது.

சிலர் உயிரிழந்தனர் — உடல் உறுப்புகள் இழந்தனர் சிலர் — ஐயாயிரவர் சிறைக்கொடுமைகளுக்கு ஆளாயினர்—இவைதமை எண்ணும்போது வருந்தத்தான் தோன்றும், ஆனால் இந்த துக்கத்தாய் ஈன்றெடுத்த சேய், வெற்றி, அதை எண்ணும்போது, பட்ட கஷ்டமத்தனையும் பகலவனைக் கண்ட பனி பறந்தோடிச் செல்வது போலாகிறது. களம் சென்றோம் — வெற்றியும் பெற்றோம்! அறப்போரில் ஈடுபட்டோம், சிறப்பளிக்கும் வெற்றி கண்டோம். பாம்பும் இல்லை, புற்றும் இல்லை!

ஜூலை 15-ல், தோழர்கள் அனைவருக்கும், இந்த நினைவுகள் வரத்தான் செய்யும்! இந்த வீரக் காதைகளைப் பேசி மகிழவும், நாட்டவருக்கு எடுத்துரைக்கவும், ஜூலை 15, மும்முனைப் போராட்ட முழக்க நாளாகக் கொண்டாடும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நாவலர் நெடுஞ்செழியனை அறிக்கை அனுப்பிடச் சொன்னேன்—கண்டிருப்பீர்கள்—களிப்புடன், அந்த நாளைக் கொண்டாடி, பெற்ற வெற்றியை எடுத்துரைத்து இனிப்பெற வேண்டிய வெற்றிகளை நினைவுபடுத்தி, ஆற்றலும் அடக்கமும், செழித்தோங்கும்வகைகுறித்துப்பேசிச் செயலாற்றும் செம்மல்களாக, அனைவரையும் மாற்றி அமைக்கும் சீரிய பணியினில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஜூலை 15!—கொடுமைக்கு ஆளாகியுள்ள திராவிடர், நினைத்தால் எப்படிக் கொதித்து எழ முடியும் என்பதை எடுத்துக்காட்டும் நாளாகிவிட்டது. திராவிட இன எழுச்சி வரலாற்றிலே, ஒரு செவ்வேடு! கண்டு கண்டு, கருத்துப் பெற உதவும் காட்பியம்!

போரின் 'எதிரொலி'களென, இன்னமும், கல்லக்குடி தூத்துக் குடி வழக்குகள் உள்ளன—நாடு அறியச் செய்யுங்கள்.

உயிரிழந்த குடும்பத்தாருக்கு ஒரு சிறு அனுதாபமும் காட்டாமலிருக்கிறது சர்க்கார்—நியாயமா என்று கேளுங்கள்.

குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு வழங்கும் நேர்மை சர்க்காருக்கு பிறக்கும்படி செய்யுங்கள்.

பேசி மகிழுங்கள்—ஆனால் இந்தப் 'போர்' வெறும் பூ பறிப்பது போன்றது என்று எண்ணத்தக்க வகையான பெரும் போர் நடாத்தியே பிறப்புரிமையைப் பெற்றாக வேண்டும் என்ற உண்மையை மறவாதீர்—அந்தத் தியாகத்துக்கு நம்மை எல்லாம் தயாராக்கும் பயிற்சிதான், மும்முனைப் போர் என்பதை உணர வேண்டுகிறேன்.

ஜூலை 15—மும்முனைப் போருக்கான முதல் முழக்கம்—இந்த அறப்போரில் நாம் காட்டிய ஆற்றல், எங்ஙனம் கிடைத்தது, என்பதை எண்ணிப் பாருங்கள் — வலிவூட்டும் அந்த 'குடும்ப பாசம்' குன்றாமல் குறையாமலிருக்க வேண்டும்.

அறப் போர் வீரர்காள்! வாழ்த்துகிறேன்! நீவிர் அரும்பணியாற்றிப் பெற்றுத்தந்த வெற்றிக்காக, என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அழைப்பு எந்த நேரத்தில் கிடைத்தாலும் அணிவகுத்துக் களம் செல்லும் முறையிலே கழகம் மிளிரவேண்டும். நான் பேசுவது போதாது, இதோ கவிஞன் ஷெல்லி பேசுகிறான், கேளுங்கள்:—

"அடர்ந்த நிசப்த ஆரணியத்தைப் போல்
அமைதியாய், உறுதியாய் நில்லுங்கள்,
கைகளைக் கட்டிக்கொள்ளுங்கள்
கண்கள் தோல்வியறியாக் கணைகளாயிருக்கட்டும்

*

கோடுங்கோலர் துணிந்தால்
குதிரைகளை ஓட்டி வரட்டும்!
குத்தட்டும், வெட்டட்டும், அறையட்டும், அரியட்டும்
இஷ்டம்போல் செய்ய இடங் கொடுத்துவிடுங்கள்.

*

கோபம்தணியுமட்டும் கோல்லட்டும்!
மடக்கிய கைகளோடும், மருளாத கண்களோடும்
அச்சமும் ஆச்சரியமும் அகற்றி
அவைகளைப் பார்த்துக் கோண்டிருங்கள்

வேட்கத்தோடு திரும்பிவிடுவர்
சிந்திய இரத்தமே முகத்தில் நாணம் காட்டும்
குறைக்க முடியாத தொகையினராய்
விழித்தெழும் சிங்கம் போல் வீறு கொண்டு எழுங்கள்!
தூக்கத்தில் படிந்த பனியைச் சிதறுவது போல்
பிணித்துள விலங்கினைப் பெயர்த்தெறியுங்கள்!
நீங்கள் பலர், அவர்களோ சிலர்!

அன்பன்
அண்ணாதுரை

★

உரிமை முரசொலி

அறப்போர் தொடுத்துள்ளனர் திருவிதாங்கூர் தமிழர்கள், தலைவர்களைக் கைது செய்து, மற்றவருக்கு அச்சமூட்ட எண்ணிற்று திருவிதாங்கூர் சர்க்கார். ஆனால் மக்கள் இந்த அறை கூவலை ஏற்றுக் கொண்டுள்ளனர், தொடர்ந்து தடை உத்தரவை மீறுவதென்றும், அதற்கும் செவிசாய்க்க வில்லையென்றால் வரி கொடா இயக்கம் ஆரம்பிப்பதென்றும் முடிவு செய்துள்ளனர். வரவேற்கிறோம்.

நெடுங்காலமாகவே தமிழரின் உரிமைகளுக்கு அங்கு உலைவைத்து வருகிறார்கள். ஏக இந்தியா எனும் மயக்கு மொழி பேசி, உரிமையை ஒழித்திட எண்ணினர் — இயலவில்லை என்பதைக் கண்டு கொண்டனர்.

மொழிவழி அரசு அமைக்கும் கொள்கையைப் புனிதமானது என்று புகழ்ந்து பேசிவந்த காங்கிரஸ், ஆட்சி செய்கிறது — ஆனால் இப்போது மொழிவழி அரசு கேட்பதும், அதற்கான கிளர்ச்சி செய்வதும், கேடுபயப்பது, என்றுபுதிய பண்பாடுகிறது.

டில்லி சர்க்கார் மொழி வழி அரசுக்கு விரோதமாக இருக்கிறது என்ற ஒரே காரணத்தால்தான், திருவிதாங்கூர் சர்க்கார் போன்றவைகள், தமிழரைத் தாக்கும் துணிவு கொண்டு விட்டன.

அடக்குமுறையை அவிழ்த்து விடு, நாங்கள் குறுக்கிடப் போவதில்லை, மொழி வழி அரசு கேட்போர் அச்சப்படும் அளவுக்கு நிலைமை வளரட்டும், என்று, டில்லி கூறி விட்டதோ என்னவோ!

ஏன், டில்லி, மொழி வழி அரசுடன் தொக்கி நிற்கும் பிரச்னைகளை உடனடியாக, கசப்பும் குரோதமும் வளரா முன்பு, சச்சரவு மூளா முன்னம், தானாகவே, முன்னின்று தீர்த்து வைக்கக்கூடாது! பொறுப்புள்ள செயலா இது!

திருவிதாங்கூரில் துவக்கப்படும் அறப்போரின் முழுத் தகவல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. முறையும் திட்டமும் தெரிந்தபின், இதுபற்றி, ஆங்கு வதியும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எம் முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்துக் கூறுவோம்.

பொதுவாக, மொழி வழி அரசுக்காக, தாய்த் தமிழகத்துடன் தமிழ் பேசும் வட்டாரங்கள் இணைக்கப்படுவதற்காக நடத்தப்படும் நேர்மையான அறப்போரை தி. மு. க. ஆதரிக்கிறது. ஆங்கு உள்ள தி. மு. க. தோழர்களும் ஆதரவு அளிப்பர். நிலைமையை அறிந்து நமக்குத் தெரிவிக்கும்படி நாஞ்சில் தி. மு. கழகத்தைக் கேட்டுக்கொள்கிறோம், உரிமை முரசொலி ஓங்குக! மொழி வழி அரசு வெல்க!

⊛

சும்மாயிரார்!

சொறி பிடித்தவன் கை சும்மாயிராதென்பார்கள்—கோவை சுப்பிரமணியத்துக்கும் மந்திரிப் பதவி கிடைத்த நாள் முதல் வாயும் சும்மாயிருப்பதில்லை; மூளையும் சும்மாயிருப்பதில்லை.

அமைச்சரின் நிர்வாகத்துக்கு சரியான 'அடி' கொடுக்கப்பட்டது, ஆரம்பக்கல்வித் திட்ட ஒழிப்பு மூலம். வாலறுந்தது சும்மாயிராதென்பார்களே அதுபோல, அவரால் அந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை போலிருக்கிறது. இப்போது, ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்! இந்தியை எஸ். எஸ். எல். சி. பரீட்சை மொழியாக ஆக்கி —அதனை விளக்கி, வெண்டைக்காய் அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார். அதனை, நாம் கண்டிக்கு முன்னரே, தென் இந்திய ஆசிரிய சங்கத்தார் கூடி 'கனமான' குட்டு ஒன்று வைத்திருக்கின்றனர், கல்வி அமைச்சருக்கு.

"ஐயா! இப்படியெல்லாம் ஆடாதீர். திடீர், திடீர் என்று உத்தரவிடுவதால் எவ்வளவு திகைக்க வேண்டியிருக்கிறது தெரியுமா? கல்வி சம்பந்தமாக ஏதாவது செய்ய வேண்டுமானால், அதுபற்றி விஷயம் தெரிந்தவர்களைக் கலந்தாலோசிக்காமல் எதுவும் செய்யாதீர், சும்மா இருமேl," என்பதாக.

இப்படி, சந்தி சிரிக்கும் இவர் சென்னையில் நடைபெற்ற படிப்பக ஆண்டுவிழா ஒன்றில் பேசும்போது, கவனமாகக் கூறினாராம், "லைப்ரரியில் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் போதும், பத்திரிகைகளை வாங்கிப்போடும் போதும் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ஏனெனில் இப்போது, குரோதத்தையும் துவேஷத்தையும் உண்டு பண்ணும் ஏடுகள் அதிகமாகிவிட்டன," என்பதாக.

இதற்கும், நாம் பதில்தர வேண்டிய அவசியத்தை வைக்கவில்லை, பாசில் எனும் நண்பர்! அமைச்சரைப் பார்த்தே கேட்டிருக்கிறார். "ஐயா! அப்படி அந்தப் புத்தகங்களைப் படிப்பதால் யாருடைய மனமும் மாறி விடாது. நானும் எவ்வளவோ கம்யூனிஸ்டு புத்தகங்களைப் படித்திருக்கிறேன்; அதனால் நான் கம்யூனிஸ்டாகி விடவில்லை. அதனால், உண்மையும் கருத்தும் இருந்தால்தான் மக்களை வசப்படச் செய்யும். ஆகவே, எல்லாவற்றையும் மக்கள் படிக்க வேண்டுமேயொழிய — வெறுக்கக் கூடாது!", என்று. சூடான பதில்! சுப்பிரமணியத்தின் முகம் எப்படியிருந்ததோ, தெரியவில்லை!!

இப்படி, தொட்டதும் துலங்காமல், சொல்வதும் விளங்காமல், அல்லாடும் இந்தச் சுப்ரமணியம் சும்மாவாவது இருக்கிறாரா என்றால், அதுவும் இல்லை!

செச்சே! பாபம்! பரிதாபமாயிருக்கிறது, சுப்ரமணியத்தைப் பற்றிய செய்திகளைப் பார்க்கும் போது.

⊛

அந்தச் சுவையை அவரும் அறிவார்!

"ஒயின் எனும் மதுபானம் காலம் ஆக ஆக எப்படி ருசி அதிகரிக்கிறதோ அதுமாதிரி அவர்களின் சேவை நாள் ஆக ஆக பிரகாசிக்கிறது"

கூட்டுறவு இயக்க ரிஜிஸ்திரார் திரு. ரயன் அவர்களைப் பாராட்ட சென்னையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், இவ்விதம் பேசினார், வெங்கடகிருஷ்ணையர் என்பவர்.

சென்னைக் கவர்னர் பிரகாசாவும் பிரசன்னமாக இருந்தார்.

ரயன் அவர்களின் சேவையின் மேம்பாடு, வெங்கடகிருஷ்ண ஐயருக்குத் தெரிந்திருப்பதில் யாருக்கும் ஆச்சரியம் ஏற்படாது. ஆனால் அவருக்கு 'ஒயின்' உடைய 'குண விசேஷம்' தெரிந்திருப்பது கேட்டுப் பலரும் ஆச்சரியமடைவார்கள். எப்படி ஐயருக்கு ஒயின் பற்றித் தெரிந்தது!

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார் நமது கவர்னர்!

"நல்ல வேளை ராஜாஜி இப்போது முதல் மந்திரியாக இல்லை. அவர் இங்கு இருந்தால் தன்னுடைய சர்க்காரின் உயர்தர அதிகாரி ஒருவர் ஒயினை ருசித்திருக்கிறார் என்பதற்காகக் கடுமையான நடவடிக்கை எடுத்திருப்பார்" என்று கவர்னர் பேசினார்.

அனைவரும் சிரித்தனராம்!!

ஒயின் ருசித்த அதிகாரியை ராஜாஜி கடுமையாகத் தண்டித்திருப்பார் என்று கூறிய கவர்னர் பிரகாசாவுக்கு, ராஜாஜியிடம் நெருக்கமான நேசம் உண்டு என்ற போதிலும், அவரைப் பற்றிய முழு உண்மையும் தெரியவில்லையே என்று ஆச்சரியப்படுகிறோம்.

வெங்கடகிருஷ்ண ஐயர் ஒயின் சுவை அறிந்திருக்கிறார் என்ற பொருள்படகவர்னர் பேசியபோது, ராஜாஜிக்கு அந்தச் சுவையே தெரியாது என்று எண்ணிக் கொண்டார் போலிருக்கிறது.

அந்தச் சுவையை அவரும் அறிவார், என்று கவர்னருக்குக் கூறினால், அவர் திடுக்கிட்டுவிடக் கூடாது, ஆச்சாரியாரின் அன்பர்கள் ஆத்திரம் அடைந்துவிடக்கூடாது—உண்மையை தக்க ஆதாரத்துடன் கூறுகிறோம், அந்தச் சுவையை அவரும் அறிவார்!

யார் கட்டிவிட்ட கதை இது! — என்று என்மீது கோபிக்காதீர், அன்பர்களே! நான் சாட்சாத் ராஜகோபாலாச்சாரியாரின் பேச்சை ஆதாரமாகக் கொண்டே இதைக் கூறுகிறேன்.

அவர் முதலமைச்சராக இருந்தாரே—இப்போதல்ல— சுயராஜ்யத்துக்கு முன்பு—அப்போது, சென்னை சட்டசபையில் மதுவிலக்குக் குறித்து விவாதம் வந்தபோது, அவரே, இந்தக் கருத்தை வெளியிட்டார்.

குடிப்பழக்கம் எளிதிலே நீங்கிவிடாது என்ற காரணம் காட்டி சட்டசபை மெம்பர் ஒருவர் மதுவிலக்கை எதிர்த்தார்.

குடிப்பழக்கத்தை ஒழித்துவிட முடியும், என்று ஆச்சாரியார் வாதாடினார்.

அனுபவம் இல்லாததால் அப்படிச் சொல்கிறீர், என்று மெம்பர் கூறினார்.

"நானும் குடியை ருசித்துப் பார்த்திருக்கிறேன் — ஒரு சமயம். குடிப்பழக்கத்தை நிறுத்திவிடுவது சாத்யம் தான்" என்று ஆச்சாரியார் கூறினார்.

மெம்பர், வாய்மூடிக்கொண்டார் —வாதத் திறமையால் அல்ல—அவரும் அறிந்துதானிருக்கிறார் சுவையை என்பதைக் கேட்ட திகைப்பால்!

ஆகவே, அந்தச்சுவையைஅவரும் அறிவார் என்பதைக் கவர்னருக்குக் கூறுகிறோம். ஏன் என்கிறீர்களா? சும்மாதான், சிவமே! சும்மாதான்!!

ஆராய்ச்சி

அங்கும்

1960க்குள், அணுசக்திமூலம் மணிக்கு 100 மைல் வேகத்தில் செல்லும் ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்திட இயலும் என்று ஆராய்ச்சியாளர் ஹிபர்டு என்பவர் கூறினார்.

இது அமெரிக்காவில்!

*

30 நாடுகளைச் சேர்ந்த 700 விஞ்ஞானிகள், இந்தத் திங்கள் ஆக்ஸ்போர்டு நகரில் கூடி அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தி, மனிதகுலவாழ்வை வளமாக்கும் விஷயமான ஆராய்ச்சிபற்றிக் கலந்து பேச இருக்கிறார்கள்.

இது பிரிட்டனில்!

இங்கும்

டேராடன் அருகே, பூமியைத் தோண்டியதில், கிடைத்த கல்லில் சமஸ்கிருத எழுத்து காணப்பட்டதாகவும், இந்த இடத்தில் சிலாவர்மன் என்ற அரசன் அஸ்வமேத யாகம் செய்திருக்கிறான் என்று யூகிக்க இடம் இருக்கிறது என்றும் ஆராய்ச்சியாளர் ராமச்சந்திரன் கூறுகிறார்.

இது இந்தியாவில்!!

*

தென் இந்திய அர்ச்சகர்கள் மாநாடு கூடி, கோயில்களில் தமிழில் அர்ச்சனை (மந்திரம்) சொல்வது சாஸ்திரத்துக்கும், சட்டத்துக்கும் விரோதமானது என்று ஆராய்ச்சி செய்து பேசி, தீர்மானித்திருக்கிறார்கள்.

இது இந்தியாவில்!



9. ஆறுமுகத்தின் அவதி!

குப்பன் வந்துபோனவுடன்தான் ஆறுமுகத்திற்கு அவன் நிலை புரிந்தது.

நளினியோடு பரவசமாக இருந்துவிட்டு ஜமதக்னியின் தோளில் சாய்ந்த வண்ணமே காரிலேறினார் பிள்ளை, அரைமணி நேரத்திற்கு முன். அதுவரை அவர் உடலிலே உயிர் நடமாடிற்று. ஆனால் அதே பிள்ளை பாக்யபவனம் வருவதற்குள்ளே பிணமாகிவிட்டார்!

இதற்கு யார் பொறுப்பாளி?...

அதை நினைத்த உடனேயே ஆறுமுகத்தின் கண் முன்னிலையில் சிகப்புத்தலைகள் தோன்றின. தூக்குக் கயிறு தொங்குவது தெரிந்தது.

அஞ்சலையின் ஓலமும் பொன்னியின் பெருமூச்சும் கேட்டது.

நெஞ்சு படபடக்க ஓடினான் ஆறுமுகம். இரண்டே எட்டில் போய் விளக்கை அணைத்தான். திரும்ப வந்து காரை ஓட்டிக்கொண்டுபோய் ஷெட்டுக்குள் நிறுத்தினான். ஷெட்டின் உள் தாப்பாளை போட்டுவிட்டு தன்னுடைய நிலைமையை மறுபடியும் யோசிக்க ஆரம்பித்தான்.

எவ்வளவு பயங்கரமான சூழ்நிலையில் அவன் மாட்டிக் கொண்டிருக்கிறான்!

உத்தமநாதர் தன் முதியநிலையில், அதிகமாகக் குடிக்கக்கூடாது என்று டாக்டர் கூறியதையும் கேட்காமல், கொவ்வை இதழைச் சுவைத்த வண்ணமே குடியில் மூழ்கி எழுந்தார்! அதன் அதிர்ச்சி அவருடைய இருதயத்தையே ஓட்டமற்றதாக்கி விட்டது.

இதற்கு யார் பொறுப்பாளி? ஆம்.....!

உத்தமநாதரேதான் பொறுப்பாளி!

ஆனால் உலகம் அதை ஒப்புக்கொள்ளுமா?

போலிஸ் லாக் அப்பில் அடிக்கடி கிடந்தவர்கள் வாழும் உத்தமநாதபுரத்து வாசியான ஆறுமுகம் கூறுவதை உண்மை என்று உலகம் ஒத்துக் கொள்ளுமா?

"திருட்டு பயல்கள்!

நாகரீகமற்ற முட்டாள்கள்!

கொலைகாரப் பாவிகள்!

மட்டரகமான கூட்டம்!"

இதுவும் இன்னும் மோசமான பட்டங்கள்தானே ஆறுமுகத்தின் மீதும் அவன் வாழும் இடத்தில் இருப்பவர்கள் மீதும் சென்ற இடத்திலெல்லாம் சூட்டப்பட்டன.

டவுனிலே எங்காவது திருட்டு நடந்தால் சேரியிலே இருக்கும் வாலிபர்களுக்குத்தானே போலீஸின் முதல் அடி விழும்.

இந்தச் சேரியிலே கண்டோர் மிரளும் வகையில் ஜொலிப்பு என்று பேரெடுத்து வாழ்ந்துவரும் ஆறுமுகத்தின் வார்த்தைக்கு எப்படி மதிப்புக் கிடைக்கும்?

அல்லது ஜமதக்னி வந்து தன்னுடைய அஜாக்கிரதையால்தான் பிள்ளை இறந்துவிட்டார் என்று கூறுவாரா? மக்களையே வியாபாரம் செய்யும் அவருக்கு இந்தப் பழியிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி தெரியாதா என்ன!

"உத்தமநாதரே எனக்குத் தெரியாது!" என்று அவர் கூறினால் அதை மறுத்து யார் பதில்கூற முடியும்?

அப்படித் தெரிந்திருந்தாலும் இன்று மாலை நடந்த சுவைமிகுந்த காட்சிகளை அவர் மறுத்தால், அதை யாரால் மறுக்க முடியும்?

பாப்பாவின் புன் சிரிப்பில் உலகமே மயங்குமே!

அதனை எதிர்த்து ஆறுமுகம் என்ன செய்ய முடியும்?

ஆம்! இனிமேல் யோசித்துப் பயனில்லை. அவன் கொலை செய்துவிட்டான்! இல்லை, உலகம் அப்படித்தான் கூறும்! இதோ, இன்னும் சிறிது நேரத்தில் யாராவது வந்து உத்தமநாதரைப் பார்த்து விடுவார்கள். உடனே அவன் கைகளுக்கு விலங்கு பூட்டப்படும். அவன் முதுகு போலீஸின் சாட்டைகளால் பதம் பார்க்கப்படும். கஞ்சி கூட இல்லாமல் கைதியாகச் சிறையில் கிடப்பான். சிலநாட்களில் அவன் கழுத்தில் கயிறு மாட்டப்படும்!

ஆறுமுகம் கொலைகாரன் — அவன் ஒழிக்கப்பட்டான் என்று 'காலைச் செய்தி' பத்திரிகை தலைப்புப் போடும். "ஐயோ.....!" என்று கூறித் தலையில் கை வைத்தான் ஆறுமுகம். தலை பூராவும் வியர்த்து ஒரே ஈரமாக இருந்தது. "இனிமேல் யோசித்து என்ன பயன்? இப்போதே ஓடிவிட்டால் ....! ஆம்! எங்காவது பக்கத்துக் கிராமத்துக்கு ஓடிப்போய்விட்டால் என்ன?" என்று எண்ணி எழுந்தான் ஆறுமுகம். ஓடத்திரும்பியபோது

பிள்ளையின் பிணக் கோலம் காட்சியளித்தது.

"எவ்வளவு முட்டாள் தனமான காரியம் இது. இங்கேயே இந்தப் பிணத்தைப் போட்டு விட்டுப் போனால் அவனைத் தேடி போலீஸ் பட்டாளமே கிளம்பி விடாதா? ஓடி என்ன பயன்?

அப்படியானால் தப்புவதற்கு வேறு வழியே இல்லையா?"

மறுபடியும் உட்கார்ந்தான் ஆறுமுகம். அவனுடைய பயம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

"பிள்ளையை அவர் அறையிலேயே கொண்டுபோய் போட்டு விட்டால்......!

ஆமாம்...அப்பொழுது யாருமே அவன்தான் கொலை செய்தான் என்று கூற முடியாது.

அப்படியே அவரை எடுத்துக் கொண்டுபோய் அவர் அறையிலே போட்டுவிட்டு, அவன், வீட்டுக்கு போய்விட்டால், பழி அவன் மேல் எப்படி வரும்?"

இந்தயோசனை ஆறுமுகத்திற்குச் சரியென்று தோன்றியது. உடனே எழுந்து பிள்ளையைத் தூக்கினான். பிணம் இவ்வளவு கனமாக இருக்குமென்று அவன் எண்ணியதே இல்லை! ஒரே பளுவாக இருந்தது. "காரையே ஒரு கையால் தள்ளிப் பழக்கப்பட்ட நமக்கே இவ்வளவு பளுவாக இருந்தால், சாதாரணமானவர்கள் தூக்கவே முடியாது போலிருக்கே!" என்று யோசித்துக்கொண்டே பிள்ளையைத் தூக்கித் தோளில் போட்டான். அவருடைய உடல் தோளில்சாய்ந்தவுடன் அவர் பையிலிருந்த பணப்பை கீழே விழுந்தது. வழவழவென்று பாலீஷ் போடப்பட்டு மெல்லியதாக இருந்த அந்தப் பர்ஸை கஷ்டப்பட்டுக் குனிந்து எடுத்தான். மறுபடியும் அவர் பையில் போட்டு திரும்பவும் அது கீழே விழுவதைவிடத் தன்னிடமே இருக்கட்டும் என்று தன் பையில் போட்டுக்கொண்டான். பிள்ளையைத் தோளில் சாய்த்தவண்ணமே மெதுவாக ஷெட்கதவுகளைச் சாத்திவிட்டு பங்களாவின் முன் வாயிற்படி நோக்கி வந்தான்.

அந்த நேரத்திலே ஒரு பூனை குறுக்கே போயிருந்தால்கூட அவன் படபடத்த இருதயம் நின்று போயிருக்கும். அவ்வளவு நடுக்கத்தோடு இருட்டில் நடந்தான்.

அவன் வாயிற்படியில் ஏறியதும் தான் புதியதொரு பிரச்னை எழும்பியது.

இனிமேல் விளக்குப் போடாமல் அவன் எப்படிப்பிள்ளையின் அறைக்குச் செல்லமுடியும். அதுவும் மாடியில் பாஸ்கர் அறையைத் தாண்டி இருக்கும் இரண்டாவது அறையல்லவா அவருடையது என்று குப்பன் கூறினான். ஒரு வேளை விளக்கு போட்டவுடனேயே பாஸ்கர் விழித்துக் கொண்டால்...!, அவன் கதி என்ன?

விளக்குப் போடும் பொழுதோ, அன்றிப் பிள்ளையின் அறையைத் திறந்து அவரைப் படுக்கையில் போடும் பொழுதோ, அல்லது அவன் திரும்பிவரும்போதோ, எந்த நேரத்திலும் அவன் பிடிபடலாம். "இந்த அகாலவேளையில்நீஏன் இங்கு வந்தாய்?" என்று அவர்கள் கேட்டால் அவன் என்னபதில் கூறுவான். இதை நினைத்தவுடனேதான் எவ்வளவுபெரிய பைத்தியக்காரத்தனம் செய்ய இருந்தோம் என்று ஆறுமுகத்திற்குப் புரிந்தது.

"அப்படியானால் வேறு வழியென்ன?"

பிள்ளையின் சவமோ ஒரே கனமாக கழுத்தை இழுக்கியது.

என்ன செய்வது என்று தெரியாமல் முன்னாலிருந்த நீலாம்பரப் புதருக்குள் நுழைந்தான்.

அந்த நேரத்திலே யாரோ முன்னாலிருந்து நடந்து வருவது போல் காலடிச் சப்தம் கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பினான்.

அடி தப்பாமல் யாரோ வந்தனர்!

அப்படியே கீழே தொப்பென்று பிணத்தைப் போட்டான்!

சலக்கென்ற சப்தத்தோடுபிணம் விழுந்தது. ஆச்சரியத்தோடு கீழே குனிந்து பார்த்தான்.

அங்கே குப்பன் விட்டுப் போன மண் வெட்டியின் மேல் பிள்ளையின் பிணம் விழுந்தது. மண் வெட்டி அவர் மார்பகத்தில் நன்றாக அழுந்தி ஏறி விட்டிருந்தது.

சேச்சே! செத்ததுமில்லாமல் மண் வெட்டியின் காயம் வேறு?

குத்திக் கொண்டிருந்தமண்வெட்டியை எடுப்பதற்குள் காலடி சப்தம் வேகமாகியது. அருகில் வந்தது.

பிணத்தை அப்படியே போட்டு விட்டு செடிகளிடையே நகர்ந்து வேகமாக ஓரத்தில் வந்து நின்று பார்த்தான்.

இந்தநேரத்திலே இங்கேவருவது யாராக இருக்க முடியும்?

"ஆம்.........! ஆம்! அந்த நல்ல முத்துதான்! அவன்தானே அன்றிரவு பத்து மணிக்கு இங்கு வருவதாகக் கூறினான்.

அப்படியானால் புஷ்பாவும் இங்கு வருவாளா?

இருவரும் கார் ஷெட்டுக்குப் போவார்கள். ஒரு வேளை அந்த நேரத்திலே தான் மாட்டிக் கொண்டால்.........!

சேச்சே! எப்படியிருந்தாலும் அந்த இருட்டிலே அவன் அவர்கள் கண்களுக்கு எப்படிப் படுவான்?

கடைசியாக காலடிச் சப்தம் கிட்டேவந்தது. தலையை எட்டிப் பார்த்தான்.

அட, எழவே! ஒரு நாய் ஓடிக் கொண்டிருந்தது அந்த இருட்டிலும் நன்றாகத் தெரிந்தது! கொஞ்சம் மன அமைதியோடு மறுபடியும் பிணத்தினருகில் உட்கார்ந்தான் ஆறுமுகம்.

"நாய் ஓடி வந்ததைப்போலத் தானே நல்ல முத்துவும் ஓடிவந்திருப்பான்......!"

நல்லமுத்துவின் ஞாபகம் மறுபடியும் மறுபடியும் ஆறுமுகத்தின் நினைவுக்கு வந்தது.

"முதலாளிகள் கூட்டம் ஒழிய வேண்டும்; அல்லது பாட்டாளி வர்க்கம் சக்தற்றதாக்கப்படவேண்டும்!"

அடையாற்றிலே புஷ்பாவிடம் இந்த வார்த்தைகளை எவ்வளவு

அழுத்தமாகக் கூறினான் நல்ல முத்து.

இதைப்போலக் கோபமாகத் தானே சீனுவும் சின்ன முதலாளியிடம் "இந்தப் பயலை ஒழித்தால் தான் நம்பதேசமே உருப்படும்!" என்று கூறியதும் ஞாபகத்திற்கு வந்தது. அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் ஒழித்துவிடுவதாகக் கூறிக் கொள்கின்றனர். உடனே ஆறுமுகத்தின் மனதில் திடீர் யோசனை ஒன்று பிறந்தது.

ஆம்! இந்த முதலாளியை அந்தப் புரட்சிக்காரன் கொன்றான் என்று கூறிவிட்டால்......!

ஆஹா! எவ்வளவு அருமையான யோசனை!

"முதலாளிகள் ஒழிக!" என்று தானே மில்காரர்கள் சத்தம் போட்டுக்கொண்டு ஊர்வலம் வருகின்றனர். ஆகவே நல்லமுத்துவே உத்தமநாத பிள்ளையைக் கொன்றுவிட்டான் என்று நினைக்கும்படி செய்து விட்டால்......!

ஆறுமுகத்தின் மூளை வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

இனிமேல் யோசிக்க வேண்டியதில்லை. அந்த ஒரே வழிதானிருக்கிறது.

நல்லமுத்துவின் மேல் பழியைப் போடுவது!

அவனும் பத்து மணிக்கு பங்களாவிற்கு வருவதாகக் கூறி இருக்கிறானே. அந்த ஒரு விஷயத்தை மாத்திரம் சரியாக அவன் கூறி விட்டால் அவன் மேல் யாரும் பழி சுமத்தமாட்டார்கள்.

மறு நிமிடமே ஆறுமுகத்தின் நரம்புகள் புதுஉணர்ச்சி பெற்றன.

தூக்குக் கயிறை அறுத்தெறிந்து விட்டுத் தப்பித்து ஓடுவது போன்ற விடுதலை உணர்ச்சி தோன்றியது. எழுந்து ஓடத்திரும்பினான்.

பிள்ளையின் பிணம் வாய் பிளந்த வண்ணம் அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது!

சேச்சே! மறுபடியும் எவ்வளவு பெரிய தப்புச் செய்ய இருந்தான். பிள்ளையை அப்படியே போட்டு விட்டுப் போனால் நாளைக் காலைக்குள் குப்பன் அதைக் கண்டுபிடித்து விடமாட்டானா?

அப்படியானால் திரும்பவும் மாடியிலேயே போட்டு விட்டுப் போகலாமா?

அதுவும் ஆபத்தானதுதானே! புஷ்பாவும் நல்லமுத்துவும் ஒருங்கே அந்த பிணத்தைக் கண்டு விட்டால் அவன் திட்டங்கள் என்ன ஆவது?

ஆம்! அவன் பழி சுமத்தும் நல்லமுத்து ஜெயிலுக்குப்போகும் வரை இந்தப் பிணம் மறைக்கப்பட வேண்டும். அல்லது ஆறுமுகத்தின் வாக்கு மூலம் கொடுக்கப்படும் வரையிலாவது இந்தச் சடலம் மறைக்கப்படவேண்டும்! புரட்சிக்காரர்கள் கொலை செய்தவனை அப்படியே கடலில்போட்டு விட்டதாக "காலைச் செய்தி" பத்திரிகையில் பல நாட்கள் அவன்படித்திருக்கிறானே! அம்மாதிரி உத்தமநாத பிள்ளையையும் நல்லமுத்து எங்காவது கொண்டு போய் ஒழித்திருக்கக் கூடாதா?

ஆம்! அதுதான் இயற்கையான சம்பவமாகும். நிச்சயமாக இந்தச் சடலம் அழிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவன் திட்டங்கள் நிறைவேறும். அவன்மேல் குற்றம் வராது. அவன் டிரைவர் வேலை நிலைக்கும். இந்த எண்ணம் வந்த மறு நிமிடமே குனிந்து பிள்ளையைத் தூக்கப் போனான் ஆறுமுகம். அந்த நேரத்திலே மறுபடியும் அவன் கண்ணிலே பட்டது அவர் மார்பிலே குத்தப்பட்டிருந்த மண் வெட்டி. அதைப் பார்த்தவுடன் ஆறுமுகத்திற்கு ஒரு யோசனை தோன்றியது.

உத்தமநாதரை அவனே புதைத்து விட்டால் என்ன?

பல வழிகளிலும் அதுதான் சரியானது! அவனுக்கு மாத்திரம் தெரிந்த இடத்திலே அந்த உருவத்தைப்புதைத்துவிட்டால், அதற்குப்பிறகு தப்பித்தவறி அவனே மாட்டிக் கொண்டால் கூட அவனைக் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கமுடியாது. அதற்கு வேண்டிய சாட்சியம் பிள்ளையின் பிணமல்லவா? அதை அவனாகக் காண்பித்தால் ஒழிய, யாரால் கொண்டுவர முடியும்?

பிள்ளையையும் மறைத்து விட்டு, ஜாக்கிரதையாகப் பேச்சு வார்த்தைகளை[illegible] சரி மாறிக் கொண்டால் அவனையாரும் லேசில் இந்தக்கொலை வழக்கில் மாட்டிவிட முடியாது.

இந்த முடிவுக்கு வந்த மறு நிமிடமே குனிந்து பிள்ளையின் மேல் குத்தப்பட்டிருந்த மண்வெட்டியை எடுத்தான். பிள்ளையைஒருதோளில் தூக்கிக் கொண்டு, கையில் மண் வெட்டியை எடுத்துக் கொண்டு மெல்ல, மெல்ல நடந்து தோட்டத்தின் கோடிக்குப் போனான்.

அங்கேயிருந்த மூங்கிற் புதருக்கருகில் கொண்டுபோய் பிள்ளையை வைத்தான். குப்பன் எறிட்டும் பார்க்காத புதர் அது. அந்த இடத்திலே பிள்ளை புதைக்கப்பட்டால், பின் அதைக் கண்டு பிடிப்பவர்களே இருக்க முடியாது.

பிணத்தை கீழே வைத்து விட்டு சுற்றும் முற்றும் பார்த்தான்.

எங்கும் ஒரே இருள் மயமாக இருந்தது. பூனையின் நடை கூடக் கேட்குமளவு நிசப்தம் நிலவியது.

மண்வெட்டியை எடுத்து ஆறுமுகம் தன் வேலையை ஆரம்பித்தான்!

(தொடரும்)

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்-

.Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at"Dravidanadu" Press,
25. Tirukkachinambi St., Kancheepuram.